முரசொலி

வார இதழ்

ஆசிரியர் மு. கருணாநிதி

முரசு 3 || 19—4—57 வெள்ளி | ஒலி 52

எதிர்பார்த்த முடிவுதான்!



ரிமை.
செந்தமிழ் திப்பகம்.

Best copy available

★ கலை பிரச்சாரத்திற்கு; ★

'கனம்கள்' திருந்தினார்கள்!

கலைத்துறையா? அது பகவான் சன்னிதானத்திற்குச் சமானமாயிற்றே! அதையா பிரச்சாரத்திற்குப் பயன்படுத்துகிறார்கள்? அநியாயம்! அநியாயம்!!

—என்று அங்கலாய்த்தார்கள் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள்!

ஊர் ஊராகச் சென்று பிரச்சாரம் செய்தார்கள்!

சத் கதா காலட்சேபங்களிலும்; திண்ணைப் பிரசங்கங்களிலும்கூட இதையே முக்கிய பிரச்சினையாக வைத்துப் பேசினார்கள்; ஆதரவு தேடினார்கள்!

—இவர்களது வாதம் கலையிலே பிரச்சாரம் புகுவதால் கலையின் தன்மை கெடுகிறது; அழிகிறது-என்பதாகும்!

எக்காளமிட்டார்கள்; நாட்டு மக்களிடமிருந்து எதிரொலி வருகிறதா என்று எதிர்பார்த்தார்கள்; நீண்ட நாட்கள் எதிர்பார்த்தார்கள்!

முடிவு?

மக்கள் மன்றம் இவர்கள் திணிப்பதற்கு முயன்ற தீர்ப்பினை ஒத்துக் கொள்வதாக இல்லை.

நோக்கமில்லா இலக்கியத்தையும், கலை அம்சத்தையும் விட—ஒரு இலட்சியத்தை; அல்லது நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கும் கருத்தினைக் கனிவுடன் எடுத்துக் கூறும் நாடகங்களும்; சினிமாக்களும் நாட்டிலே அதிக ஆதரவு பெறுவதை அவர்களால் தடுத்து நிறுத்த முடியவில்லை!

சென்சார் என்னும் ஸ்தாபனம்-நடுவு நிலைமையோடு இருந்து நாசக் கருத்துக்களை மட்டுமே நாட்டில் நடமாட முடியாமல் தடுத்து நிறுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் மகோன்னத அமைப்பு அவர்களது கையிலே சிக்கிற்று!

ஆட்சி பீடத்திலே இருப்பவர்களும் கண் ஜாடை காட்டினார்கள்; கவின்மித எண்ணங்களைக் கத்தரித்துப் போடு என்று உத்தரவிட்டார்கள்; ரகசியமாகக் கைலாகும் கொடுத்து மெச்சிப் புகழ்ந்தார்கள்!

அப்போதும்கூட கலைத்துறையிலே எழுச்சியுகம் காணத் துடிக்கும் இலட்சிய வீரர்களின் கொள்கைமுழக்கம்-நாட்டுக்குத் தேவையான கருத்து விளக்கம் நின்றபாடில்லை!

அதன் பிறகுதான் அவர்களது போர் முழக்கத்திலே ஒரு முக்கிய திருப்பம் ஏற்பட்டது!

சினிமாவிலே பிரச்சாரம் கூடாது என்று பிரச்சாரம் செய்தவர்கள் பிறகு சினிமாவே கூடாது என்று புயல் வேகத்திலே பேசவும், எழுதவும் ஆரம்பித்தார்கள்!

சினிமாவிலே பிரச்சாரம் கூடாது-இது முதல் கட்டம்!

சினிமாவே கூடாது—இரண்டாவது-கட்டம்!

—இந்த இரண்டாவது கட்டத்திலேதான் கடைந்தெடுத்த பிற்போக்கு வாதிகளோடு, பெரியாரும், அவரது கழகத்தினரும் சேர்ந்து கொண்டார்கள்!

ஏன் சினிமா ஒழிக்கப்பட வேண்டும்? அது என்ன கேடு செய்தது இந்த நாட்டிற்கு!

-தக்க பதில் கூற முடியாதவர்கள் பல நாட்கள் காரணம் தேடித் திரிந்தார்கள்!

சினிமா இந்நாட்டு மக்களுக்குக் கிடைத்திருக்கிற ஒரே ஒரு மலிவான பொழுது போக்குச் சாதனம்! அதை ஏன் ஒழிக்க வேண்டுமென்கிறீர்கள்?—என்று பொதுவான காரணத்தைச் சுட்டிக் காட்டிக் கேட்டோம்!

அமைச்சர்களைப் பார்த்து வினவினோம். அதிகமான முதலீடு செய்யப்பட்டிருக்கும்வர்த்தக அமைப்புகளிலே சினிமா ஒரு தவிர்க்க முடியாத முக்கிய இடத்துக்கு உரியதாக இருக்கிறது. அது ஒரு நல்ல வியாபாரம். அந்த வியாபாரத்தை—கோடி கோடியாய் முதலீட்டினைப் பெற்றிருக்கும் வியாபாரத்தை—கோடிக் கணக்கிலே அரசாங்கக் கஜானாவிற்கு தமாஷா வரியாக அனுப்பி வைக்கும் ஒரு பொன் முட்டையிடும் வாத்தினை ஏன் கழுத்தைப் பிடித்து நெறித்துக் கொடுமை செய்கிறீர்கள்?

—என்று வினவினோம்!

இவற்றிற்கெல்லாம் சரியான விளக்கம் கொடுக்க முடியாத அவர்கள் ஒரேயொரு காரணத்தை மட்டும்தான் கூற முடிந்தது.

"சினிமாவினால் ஒழுக்கம்-கெடுகிறது!"

-கூறினார்கள்.

எப்படிப்பட்ட சினிமாக்களால்?

தீய சினிமாக்களால்!

—அப்படியானால் அமைச்சர் அவர்களே! தீய சினிமாக்களை ஒதுக்க வேண்டுமென்று கூறுங்கள். அல்லது சினிமா நாட்டு மக்களுக்கு ஒழுக்கம்கற்பிக்கும் வகையிலே—ஆசானாக அமர்ந்து அறவுரை தரப்படும் விதத்திலே திருத்தப்பட வேண்டும்; மாற்றப்படவேண்டும்; வளர்க்கப்பட வேண்டும்—என்று பேசுங்கள்! அழிக்கப்படவேண்டும்; ஒழிக்கப்பட வேண்டும்; புறக்கணிக்கப்பட வேண்டும்; என்று பேசாதீர்கள் எனக் கேட்டுக் கொண்டோம்!

—இதற்கிடையிலேதான் உண்மை உதய சூரியன்போல உலகத்தவருக்கு விளங்கலாயிற்று!

சினிமா ஒழிய வேண்டுமென்று நினைப்பவர்கள் உண்மையிலேயே சினிமாவுக்குச் சவக்குழி தோண்ட நினைக்கவில்லை; அவர்கள் கருத்தெல்லாம் சினிமா மூலம் அறிவுலகக் கருத்துக்கள்; சீர்திருத்த எண்ணங்கள்—பரவுவதைத்தான் குழிதோண்டிப் புதைத்திட எண்ணுகிறார்கள்—இந்த ரகசியம் பாமரரும் புரிந்து கொள்கிற அளவுக்குப் பட்டவர்த்தனமாயிற்று!

ஆனால் பெரியார் சினிமாவை எதிர்ப்பதோ வேறு காரணம் பற்றியது; அவருக்கே உரித்தான தனிக் காரணம் கொண்டது!

நாளை 'கண்ணீர்த் துளிகள்' அனைவரும் சினிமா உலகிலிருந்து வெளியேறி விடுவது என்று தீர்மானம் செய்துவிட்டால் அப்போது அவர் கூடாரத்திலிருந்தும்கூட நிச்சயம் சினிமா ஒழிக-என்ற கோஷம் 'வாபஸ்' பெறப்பட்டுவிடும்!

இதோ ஒரு உதாரணம்; தந்தை ஏன் சினிமாவை ஒழிக்கப்பாடுபடுகிறார் என்பதற்கு!

ஏப்ரல் 9-ம் தேதியன்று அவர் சென்னைக் கடற்கரையிலே பேசியிருக்கிறார்:

> சினிமாக்காரர்களும், கூத்தாடிகளும் வந்து ஏராளமானப் பணம் கொடுத்து மாணவர்களையும் மக்களையும் ஏமாற்றி வாங்கிக் கொடுத்த ஓட்டுகளால் தானே இந்த 15 இடமும் (கண்ணீர்த் துளிகளுக்குக்) கிடைத்திருக்கிறது?
>
> இந்த சினிமா மக்களை எவ்வளவு தூரம் பாழாக்குகிறது என்பதற்கு இது ஒரு உதாரணம். முதலில் இதை ஒழித்துக்கட்ட வேண்டும்.

—பெரியார் பொன்மொழிகள் இவை!

சினிமாக்காரர்கள் ஏராளமான பணம் கொடுத்தார்களாம்; அந்தப் பணத்தினால் அவர்கள் தி மு. க.விற்கு ஓட்டு வாங்கிக் கொடுத்தார்களாம்!

—பெரியார் கணக்குப்போட்டுப் பார்ப்பதிலே நிபுணர்; ஆனால் என்ன காரணமோ இந்த முறைத் தப்புக் கணக்குப் போட்டிருக்கிறார்!

> தி. மு. க. காரர்களுக்கு சினிமா ஆதரவளிக்கிறது. எனவே என் எதிரிகளுக்கு ஆதரவு தரும் சினிமா ஒழிக்கப்பட வேண்டும்!

—பெரியார் அவர்களது கடற்கரைப் பேச்சின் திரண்ட கருத்து இதுதான்!

ஆனால் உண்மையில் கூறப்போனால் தனிப்பட்ட முறையில் தி. மு. கழகத்தவர் மீது இருக்கும் வெறுப்பினைத் தவிர, சினிமாவின்மீது அவருக்கு எந்தத் துவேஷமும் கிடையாது!

ஆக; சினிமா ஒழிப்புக்காரர்கள் மொத்தத்தில் 2 வகை!

> அறிவுலகப் பிரச்சாரம் கூடாது-என்று விரும்பும் வைதீகர் ஒரு பக்கம்!
>
> தி. மு. க. வினர் கூடாது என்று விரும்பும் தந்தையர் கழகம் மற்றொரு பக்கம்!

—இதில் முதற் பகுதியினர் வெட்கித் தலைகுனியும் விதத்திலே சினிமாவின்மீது தாங்கள் தொடுத்திருந்த போராட்டத்தினை வெற்றிகரமாக 'வாபஸ்' பெற்றிருக்கிறார்கள்!

வாபஸ் பெற்றதுமட்டுமல்ல; சினிமா வேண்டும்—என்று பிரச்சாரம் செய்கிற அளவிற்குக் கூட சிந்தனைத் தெளிவுபெற்று பேசவும் எழுதவும் துவங்கி விட்டனர்!

சினிமா கூடாது என்று பேசியசுப்ரமணியனார்சினிமாத் துறை முதலாளிகள் கொடுத்த வரவேற்பிலே கலந்து கொள்வதையும் ஒரு முக்கிய பணியாகக் கருதியிருக்கிறார்!

அங்கு அவர் தனது பழைய சினிமா ஒழிப்புப் பிரசங்கத்திற்கெல்லாம் பிராயச்சித்தம் தேடிக் கொள்ளும் விதத்திலே புதுப் பிரசங்கமும் நிகழ்த்தியிருக்கிறார்!

> இரண்டாவது ஐந்தாண்டு அபிவிருத்தித் திட்டத்தைப் பற்றிய சிறந்த நாடகம்; ஓரங்க நாடகங்களுக்கு பரிசளிக்கப்படும்.

—சுப்ரமணியனாரது அறிவிப்பு!

சினிமாவை எதிர்த்து; ஆசானும் சிஷ்யருமாகப் போர்ப் பிரசங்கம் செய்தவர்கள் இப்போது ஐந்தாண்டுத் திட்டத்தின் அருமை பெருமையை நாடகம் மூலம் பிரச்சாரம் செய்யச் சொல்கிறார்கள்!

கலையிலே பிரச்சாரமா?—என்று கேள்வி கேட்டவர்கள் இப்போது நாடகக் கலையிலே

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

வெள்ளி *19—4—57* *சென்னை*

தேர்தலுக்குப் பிறகு !

ஜனநாயகத்தை எந்தெந்த விதத்திலெல்லாம் சித்ரவதை செய்ய முடியுமோ அந்தந்த விதத்திலெல்லாம் செய்து; வெள்ளிக் காசுகளை வாரியிறைத்து ஓட்டுப் பெட்டியை நிரப்பிக் கொண்ட காங்கிரஸ் கட்சி காமராசரது தலைமையிலே அமைச்சரவை அமைத்திருக்கிறது.

பெரும்பான்மைக் கட்சி - என்னும் பட்டப் பெயருக்கும் ; இனி மாபெரும் உட்குழப்பம் ஏற்பட்டாலொழிய மாறுதல் எதும் நிகழாது- என்கிற அடைமொழிக்கும் உரித்தாகியிருக்கிறது, சென்னை சட்ட சபைக் காங்கிரஸ் கட்சி!

ஐந்தாண்டுகட்கு முன் திக்கு முக்காடி; உதிரிகளையும் உபயோக மற்றவர்களையும் சேர்த்துக்கொண்டு ஆட்சி பீடம் ஏறும் அருகதையை மன்றாடிப் பெற்ற காங்கிரஸ் கட்சி இன்று யாருடைய காலிலும் விழ வேண்டிய பரிதாபத்திற்குரிய நிலைமைக்கு ஆளாகாமலேயே பட்டம் பெற்றிருக்கிறது.

ஏன் இந்த நிலைமை? எப்படி ஏற்பட்டது இந்தச் சூழ்நிலை?

ஐந்தாண்டுகளுக்குள் அதள சுதள பாதாளத்தில் விழுந்துவிட்ட காங்கிரஸ் இன்று சட்டசபைக் கட்டிடத்திற்குள் தன்னுடைய சொந்தக் கால்களினால் நிற்க முடிகிற தகுதி பெற்றது எவ்விதம்?

இந்த ஐந்து ஆண்டுகளுக்குள் செத்துமடிந்த காங்கிரஸ் மக்கள் மன்றத்தில் மீண்டும் செல்வாக்கு பெற்றுவிட்டது—என்பதா இதற்குப் பொருள்?

அல்ல; அல்ல. அந்தச் சக்தியும் காங்கிரசிற்கு இல்லை.

முன்பு காங்கிரஸ் உதிரிகள் சட்டசபைக்குள்ளே ஜெயித்து வந்துவிட்ட பிறகு; அவர்களை விலைக்கு வாங்கிக்கொண்டு அரசியல் வியாபாரம் நடத்தி வந்தது.

இப்போதோ; வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் பெற்ற உதிரிகளையெல்லாம்; தேர்தலுக்கு முன்பே; அவர்கள் அபேட்சா பத்திரம் தாக்கல் செய்வதற்குச் சில விநாடிகள் முன்னதாகவே; அவசர அவசரமாக அவர்களுக்கு ஆசை வார்த்தைகள் கூறி; அது தருவேன்; இது தருவேன்—என்றுபோய் ஜோடனைகளைப் புரிந்து; நேற்றுவரை அவர்கள் மேனியிலே மினுக்கிக் கொண்டிருந்த சில்க் ஜிப்பாவைக் கழற்ற வைத்து; கதர் சொக்காயைக் கொடுத்து காரிய சித்தி பெற்றிருக்கிறது!

—இதுதான் காரணம், இந்தத் தேர்தலில் தமிழகத்தைப்பொறுத்த வரையில் காங்கிரஸ் பெரும் பான்மை பெற்றதற்கு!

முன்பு மூலப்பொருள் சரக்காக மாறி; பொது மக்கள் 'சர்ட்டிபிகேட்'டைப் பெற்ற பிறகு அவைகளைப் பேரம் பேசி வாங்கினார், ஆச்சாரியார்!

இப்போதோ பொது மக்கள் 'சர்டிபிகேட்' கிடைக்கும் என்று எதிர் பார்க்கப்பட்ட மூலப் பொருளை முன்னமேயே கிரயம் செய்திருக்கிறார், காமராசர்!

—ஆக இதன் மூலம் காங்கிரசின் கொள்கை வெற்றி நிரூபணமாகவில்லை; விருதுநகரத்தாரின் வியாபாரத் திறமைதான் பட்டவர்த்தனமாகியிருக்கிறது!

பண வசதி படைத்த பலருக்கு மந்திரி பதவி தருவதாக வாக்களித்திருக்கிறார்; காமராசர்! ஆனால் அவர்களில் ஒருவர்கூட இந்த அமைச்சரவையில் இல்லை. எனவே பதவி வரும்—என்பதற்காகவே பணத்தை வாரியிறைத்த அந்தப் பலர் இனி எப்படியிருக்கப் போகிறார்கள்—என்பதை அந்தந்தப் பகுதி வாக்காளர்கள் நிச்சயம் கவனித்தபடிதான் இருப்பார்கள். ஏனெனில் அவர்கள் அனைவரும் "எனக்கு ஓட்டளியுங்கள். நான் ஜெயித்தால் உங்கள் தொகுதிக்காரன் ஒருவன் மந்திரியாக வருவான்!" என்று சொல்லியே ஓட்டுகேட்ட மகானுபாவர்கள்; அவர்களை நாமறிவோம்!

பொதுவாகக் காமராசர் திறமைக்கு முதலிடம் தந்து தனது சகாக்களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. எப்படியும் தவிர்க்க முடியாதவர்களையும்; தான் சொல்கிறபடியெல்லாம் தலையாட்டிக் கொண்டிருப்பவர்களையும்தான் இணைத்துக்கொண்டு தனது தர்பார் மண்டபத் தேர்தல் திருவிழாவை நடத்தியிருக்கிறார்.

ஆனால் ஒன்று; காமராசர் அமைத்திருக்கும் இந்தக் கொலுவிலே பச்சை இனத்துரோகி என்று வன்னியப் பெருமக்களால் கருதப்படும் இராமசாமிப் படையாச்சியாருக்கு இடமில்லை!

கோழிக் கொடியின் கீழே, கூடி நின்ற மக்கள் பெருந்திரளைத் துச்சமெனத் தள்ளிவிட்டு, **ரிஷப வாகன சவாரி** செய்யப் போயிருந்த அந்தப் பதவி ஆசைக்காரர்தான்; இன்று ரிஷப வாகனத்தால் குப்புறத் தள்ளப் பட்டிருக்கிறார்!

மக்கள் துரோகிகள் சமுதாயச் சந்து பொந்துகளிலே சேர்ந்து கொண்டிருக்கும் அசுத்தத்திற்குச்சமானமானவர்கள்! இனிமேல் பொது மக்கள் சக்தி என்னும் சமுதாயத்தைச் சுத்தி செய்யும் மாபெரும் சக்தி அந்த அசுத்தங்களைக் கட்டாயம் அப்புறப்படுத்தத்தான் போகிறது; இதில் ஐய மேதவும் தேவையில்லை!

மந்திரியாக இருந்த ஒரே காரணத்தால் அவர் மக்கள் மன்றத்திலிருந்து மறைந்து வாழ்ந்தார்; இனி அவர் நேரடியாக தென்னாற்காடுவாழ் வன்னியப் பெருமக்களுக்கு—தன்னுடைய சொந்த நலனுக்காக செருக்கோடு உலவிய சேவலைக் கழுத்தைப் பிடித்துக் கொன்ற கொலை பாதகத்துக்கு—அவர் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்!

இந்தத் திடீர்க் காங்கிரஸ்காரரின் பொறுத்தமற்ற சுயநலப் போக்கு பற்றி அறிஞர் அண்ணா அவர்கள் முன்பு ஒரு சமயம்—**1954,** செப்டம்பர் திங்களிலே—திருவெண்ணெய் நல்லூரிலே பேசினார்கள்:

> "கடந்த பொதுத் தேர்தலில் கோயங்கா போன்ற பெரும் பண முதலைகளை எதிர்த்து வெற்றிபெற்ற கோழிச் சின்னமுள்ள பெட்டிகள் வருகிற ஜில்லா போர்டு தேர்தலிலே இருக்காது! மாறாக, அத்தனையும் மாட்டுப் பெட்டிகளாக மாற்றப்பட்டுவிட்டன—கனம் ராமசாமி படையாச்சியாரால்!
>
> "உழைப்பாளர் கட்சியினரின் போக்கால் நாங்கள் ஏமாற்றப்பட்டோம்! எங்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றம் கூடப் பெரிதல்ல; ஏனெனில் அரசியல் வாழ்விலே அத்தகைய ஏமாற்றங்கள் பலவற்றை நாங்கள் சந்தித்துவிட்டிருக்கிறோம்!
>
> ஆனால் ஒரு பெரும் சமுதாயத்திற்கு நேர்ந்த ஏமாற்றம்தான் மிகப் பெரியது. அந்த மக்கள் உண்மையிலேயே ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள்!"

—அன்று சிலருக்குத் தாங்கள் ஏமாற்றப்பட்டிருக்கிறோம்-என்கிற உண்மை புரிந்திருக்காது; ஆனால் இன்று ராமசாமிப் படையாச்சியாரால் தி. மு. கழகம் மாத்திரமல்ல; தாங்களும் ஏமாற்றப் பட்டிருக்கிறோம்—என்பதை அவர்களும் தெரிந்து கொண்டுவிட்டார்கள்!

> தென்னாற்காடு மாவட்டத்திலே காங்கிரசிற்கு வெற்றியில்லை!
>
> மந்திரியே மயிரிழையில் தப்பிப் பிழைத்திருக்கிறார்!

—அதனால்தான் ராமசாமிப் படையாச்சியாருக்கு மந்திரி பதவி இல்லை!

—இது வன்னியப் பெருமக்களுக்கு; அவர்கள் சார்பாக நின்று போராடிக்கொண்டிருக்கும் தி. மு. கழகத்திற்கு ஒரு மகத்தான வெற்றியாகும்!

★

★ கூரிய வாள் நாங்கள் — ★
கூரேற்றும் 'சாணைக்கல்' நீங்கள்!

தி. மு. கழக பொதுக் குழுவை யொட்டி, 14—4—57 அன்று குளித்தலையில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றியசொற்பொழிவின் சுருக்கம் இங்கே தரப்படுகிறது.

❋

அறிஞர் அண்ணா

அன்புள்ள தலைவரவர்களே! அருமைத் தோழர்களே! மிக்க உற்சாகமான முறையில் வெற்றி பெற்ற திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் எல்லோரையும் ஒருசேர கண்டு களிக்க—நல் எண்ணத்தையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்க இந்த சிறப்பான கூட்டத்தை ஏற்பாடு செய்து, நாங்கள் எல்லாம் கண்டு மலைக்கத் தக்க அளவுக்கு மலர் மாலைகளை சிறு சிறு குன்றுகள் போல் குவித்து — எங்களைப் பாராட்டிய உங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நடைபெற்ற பொதுத் தேர்தலில் நாங்கள் 15 பேர்தான் வெற்றி பெற்றோம்; இந்த எண்ணிக்கை மிக மிகக் குறைவானது — என்று மற்ற கட்சித் தோழர்கள் ஏளனமாகவும், இழிவு படுத்துகிற எண்ணத்துடனும் பேசுகிறார்கள்; எழுதுகிறார்கள்.

நாம் 15 பேர்தான்; உண்மை! குறைவான எண்ணிக்கைதான்; ஒப்புக்கொள்கிறேன்! ஆனால் அந்த மற்றாரின் கணக்கு போல் நாம் வலுவிழந்து விடவில்லை; வீழ்ச்சிப் பாதையிலே அடியெடுத்து வைத்து விடவில்லை—என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

வீரன் ஒருவன் மற்றொருபிரம்மாண்டமான வீரனோடு வாள் பிடித்து சண்டையிடும்போது வாள் வளைந்து போனால், அதனால் சளைத்துவிட மாட்டான். வாள் கிடைக்காவிட்டாலும், கிடைக்கின்ற சாணைக் கல்லில் தீட்டி—வாளுக்கு புதிய கூர் உண்டாக்கி, எப்படி மறுபடியும் களத்தில் இறங்குவானோ—அதுபோல 15 பேர்களாகிய நாங்கள் கூரற்ற வாள் என்று எங்களுக்குப் பட்டால், மக்கள் நல்லெண்ணம் என்ற சாணைக் கல்லில் தீட்டுவதற்கு உங்களிடம்தான் வருவோம். அப்படி வருகின்ற நேரத்தில் நீங்கள் எத்தகைய ஆர்வத்தோடு அந்த 'சாணைக்கல்லை' அளித்து; வாளுக்கு புதிய கூர்மையைத் தருவீர்களோ — அவ்வளவு ஆற்றலோடு நாங்களும் பணிபுரிய முடியும். ஆகவே உங்கள் நல்லெண்ணம் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதைத்தான் நான் இத்தகைய பாராட்டுப் பொதுக் கூட்டங்களில் வேண்டுகோளாகக் கேட்டு வருகிறேன். அப்படியானால்—உங்கள் ஆதரவிலே ஏதேனும் ஐயப்பாடா—என்றும் கேட்கலாம்; தொடர்ந்து ஆதரவு இருக்க வேண்டும் என்று கேட்பதிலே காரணமும் இருக்கிறது. நீங்கள் இன்று உற்சாகமான வரவேற்பு அளித்தீர்கள்-மலர் மாலைகளைக் குவித்தீர்கள்—நல்ல வாழ்த்துரைகளைத் தந்தீர்கள். இவைகளை எல்லாம் அளிக்கின்ற நீங்கள் உங்களது தலையாய கடமை ஒன்றை நினைவு படுத்திக் கொள்ள வேண்டும். நீங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை வளர்த்து வலுப்படுத்தினால் தான், வாளைத்தீட்ட சாணைக் கல் கிடைத்தது என்று பொருள்! இயக்கம் எந்த அளவுக்கு வெளியில் வலுவோடு இருக்கின்றதோ—அதற்கேற்றபடிதான் உள்ளே எங்களுக்கும் மானம், மரியாதை, ஆற்றல், அந்தஸ்து—கிடைக்குமே தவிர வெளியே இயக்கம் கட்டு குலைந்து—காப்பாரற்று — கேட்பாரற்று — 'ஏனோ தானோ' என்று கைவிடப் பட்டுவிட்டால்-உள்ளே சென்றிருக்கும் 15 பேரும் பாய்மரம் அறுந்துபோன கப்பலில் ஏறிவிட்ட பிரயாணிகள் நிலையிலே நின்று தவிப்போம்!



நல்ல முறையிலே நீங்கள் வெளியிலிருந்து இயக்கத்தைக் கட்டிக் காத்து வந்தால், நாங்கள் 15 பேர்தான் என்றாலும், பாராளு மன்றத்திற்கு 2 பேர் தான் என்றாலும், எங்களுக்கு புதிய வலிவும் புதிய உற்சாகமும் தானே பிறக்கும்.

தம்பி சம்பத் பேசும்போது குறிப்பிட்டார், "நாங்கள் இரண்டே இரண்டு பேர்தான் 500 பேருக்கு மத்தியிலே அமரப் போகிறோம்!" என்று. அந்த நேரத்திலே நான் எண்ணிக் கொண்டேன்—'தம்பீ; சம்பத்! நீங்கள் 2 பேர்தானே என்று கவலைப்படாதே! உங்களை வடநாட்டு ஆட்சியாளர்கள் — பாராளு மன்றத்திலே இருக்கின்ற ஆதிக்கக்காரர்கள் —ஆணவ வெறி பிடித்தவர்கள் —காங்கிரஸ் சர்வாதிகாரத்தைக் கடைசி வரை கடைப்பிடிக்க விரும்புபவர்கள்—உங்களை ஏளனப்படுத்தினால், 'ஏனோ தானோ' என்று ஏதேனும் சொன்னால் நாங்கள் சும்மாவா இருந்து விடுவோம்? எப்படி வடநாட்டு ஆரிய மன்னர்கள் கனகனும், விசயனும் தமிழர்களைத் தவறாகப் பேசினார்கள் என்று அறிந்ததும், சேரன் செங்குட்டுவனின் படை சீறி எழுந்து, வடநாடு சென்று, கங்கைக் கரையிலே அவர்களைத் தோற்கடித்து, தலையிலே கல்லேற்றி, கண்ணகிக்கு சிலை வடித்தார்களோ, அதுபோல தம்பிகளே! உங்களை இழிவாக நடத்தினால் எங்கள் நல்லெண்ணம் சேரன் செங்குட்டுவனின் படையைவிட அதிவேகமாக வந்து உங்கள் பக்கத்திலே நிற்கும்! ஆகவே தயக்கம் வேண்டாம்! தயக்கம் வேண்டாம்!' என்று நான் தம்பிக்குச் சொல்லுவதைப் போல—நீங்கள் எனக்குச் சொல்ல வேண்டும்!

"15 பேர் என்றாலும், எண்ணிக்கையைப் பற்றி ஏன் அண்ணா இக் கவலை? அவர்கள் 150 என்றால் என்ன? உங்களை ஒரு முறை அவர்கள் அலட்சியமாகப் பார்த்தால் எங்களிடம் கூறுங்கள்! ஒரு முறை ஆணவமாகப் பேசினால், எங்களை சந்தித்துச் சொல்லுங்கள்! நாங்கள் இருக்கிறோம்; பார்த்துக் கொள்ளுகிறோம்!" என்ற உறுதி மொழியை நீங்கள் எனக்கு அளிக்க வேண்டும்.

உதாரணத்திற்கு ஒன்று சொல்லுகிறேன்...

நம் வீட்டு மகனுக்கு ஒரு பெரிய பணக்காரன் வீட்டிலே பெண் கட்டி விட்டால் மட்டும் போதாது. பெண்ணைப் பெற்றவர் வீட்டுக்கு அவன் செல்லுகையில், நமக்குச்சொத்து சுகம் இருக்கிறதோ இல்லையோ, அவன் கைக்கு ஒரு கடிகாரம்— விரலுக்கு இரு மோதிரங்கள்— காதுக்கு ஒரு கடுக்கண்—இடுப்புக்கு ஒரு சரிகை வேட்டி— பக்கத்திலே ஒரு 'ஜோடி மாப்பிள்ளை' — என்ற நிலையில் அவனை அனுப்பினால்தான் மாமியார் வீட்டில் மருமகனை மதிப்பார்கள். கல்யாணம்தான் முடிந்து விட்டதே; இனி மாப்பிள்ளை சமர்த்து; மருமகள் சமர்த்து — என்று சும்மா இருந்து விட்டால் — எதுவும் இல்லாமல் அனுப்பினால் என்னவாகும்? கொடுமைக்கார மாமியாராக இருந்தால், முதலில் கை விரலைத்தான் பார்ப்பாள். எந்த ஆபரணமும் இல்லையென்றால் 'பூ இவ்வளவுதானா?' என்று எண்ணி, முதல் நாள் வாழை இலையிலே சாப்பாடு போட்டவள், மறுநாள் தையல் இலையிலே போட்டு மூன்றாவது நாள் கையிலேயே சாப்பிட்டு விடலாமே என்று சொல்லி, நாலாவது நாள் 'ஹோட்டலு'க்கு முகவரி தந்து அனுப்பும் நிலைக்குப் போய்விடுவாள். அதுபோல '15 பேரைத்தான் அனுப்பி விட்டோமே, இனி என்ன கவலை?' என்று நீங்கள் இருந்து விட்டால், விரலிலே மோதிரம் இல்லாத மருமகனைப் போல்—'ஜோடி மாப்பிள்ளை' இல்லாதவனைப்போல்-நாங்கள் துணையின்றி உள்ளே இருப்போம். ஆகவே தேர்ந்தெடுத்ததோடு உங்கள் கடமை முடிந்து விடவில்லை. தேர்ந்தெடுக்கப் பட்ட நாங்கள் தெளிவோடு நடத்தப்படவில்லை என ஐயப்பாடு தோன்றினாலும்சரி; அலட்சிய பாவத்தோடு நடத்தப் படுகிறோம் என்று உணர்ந்தா சரி; 15 பேருக்குப் பக்கத்திலே 16 00 000 மக்கள் இருக்கின்றோம். நாளாக நாளாக வளர்ந்து கொண்டேயிருக்கின்றோம்' என்று சொல்லி, எழிலுள்ள கோட்டையாக இயக்கத்தைக் கட்டிக் காக்க வேண்டும்.

அப்போதுதான் உள்ளே செல்கின்ற எங்களுக்கு எண்ணிக்கை கண்ணுக்குப் படாது; எழில் தெரியும். உங்கள் ஊழியர்களாக — தூதுவர்களாக—பிரதிநிதிகளாக—உள்ளே போகின்ற நாங்கள், "150 பேர் நாங்கள்!" என்று ஆணவத்தோடு காங்கிரஸ்காரர்கள் சொன்னால், "எங்கள் கழகம் வெளியில் இருக்கும் கட்டுக்கோப்பைப்பார்! எங்கள்கொடி பறக்காத பட்டிதொட்டி இல்லை! கிளைக் கழகங்கள் இல்லாத கிராமங்கள் இல்லை! எங்கள் கொள்கை பரவி விட்

❋ தொடர்ச்சி 9-ம் பக்கம்

13

பமீயாவை அனுப்பிய பின்னும் அரசியின் மனம் இருப்புக் கொள்ளவில்லை. அரசியாக நடிப்பதில் பமீயா மயிரிழை தவறினாலும் அல்தூனியாவின் கோபத்தை அது கிளப்பி விடலாம்! ஏமாற்றப் படுவதை யார்தான் சகித்துக் கொள்ளுவார்கள்? விளைவு...? ஒரு பொய் சொல்லப் போய் எவ்வளவு நெருக்கடியான நிலைமை? ஐயோ, அந்த அல்லாவுதீன் மட்டும் இப்பொழுது இருந்தால்! அவரை எப்படிக் கண்டு பிடிப்பது? ருசியா குழம்பி நின்றாள். ஒவ்வொரு விநாடியும், என்ன நேரப் போகிறதோ என்ற பயத்தில் ஒரு யுகமாகக் கழிந்தது. எத்தனை நாள்தான் பமீயா அரசியாக நடித்து ஏமாற்ற முடியும்? உண்மையை நன்றாக அறிந்த சயத்கான் இருக்கும் வரையில் எவ்வளவு நாட்களுக்கு அவர்களுடைய நாடகம் வெற்றிகரமாக நடக்க முடியும்? சயத்கான் என்ற நினைவு வந்தவுடன் அரசியின் உள்ளத்தில் ஓர் எண்ணம் பளிச்சிட்டது. சயத்கானைப் பார்த்தாள். அவன் குடிபோதையில் குறட்டைவிட்டு உறங்கிக் கொண்டிருந்தான்.

"சயத், சயத்," என்று அவனை மெதுவாக எழுப்பினாள்.

'ஹூம்' என்று புரண்டுபடுத்தான்.

"எழுந்திரு சயத், ஒரு முக்கியமான சேதி," என்றாள்.

சயத்கான் எழுந்து உட்கார்ந்து கொட்டாவி விட்டான். இப்பொழுதுதான் அவனுக்குக் கொஞ்சம்போதை தெளிந்திருந்தது.

"பீகம், மகராஜ் அல்தூனியாவைப் பார்த்துவிட்டு வந்து விட்டீர்களா?" என்றான்.

"பார்த்தேன்! ரொம்பவும் நல்ல மனிதர்! என்மீது அவருக்குக் கொள்ளை ஆசை...அதிருக்கட்டும்; அவருடைய தளபதி அலாவுதீனை உனக்குத் தெரியுமா?"

"அலாவுதீனா? தளபதியா? என்ன பீகம் உளறுகிறீர்கள்? அந்தப் பெயரில் இங்கு தளபதி யாருமே இல்லையே!"

பீகம் தலை சுழன்றது. இருந்தாலும் குடிபோதையில் சயத்கான் தெளிவற்றுப் பேசுகிறானே என்கின்ற ஐயத்தில் "அதுதான் சயத், அலாவுதீன்; அவரை உனக்குத் தெரியாது?" என்றாள்.

"என்ன பீகம், எனக்குத் தெரியாமல் தளபதி ஏது பீகம்? என் நினைவு தெரிஞ்சு அப்படி இங்கு ஒரு தளபதி இருந்ததில்லையே...சரி. உங்களுக்கு யார் சொன்னது?" –சயத்கான் நெருக்கடியான கேள்வியொன்றையும் கேட்டு வைத்தான்.

"இல்லை, அப்படி எப்பொழுதோ யாரோ சொன்னதாக ஞாபகம்," என்று மழுப்பி விட்டு, சோகயிருள் நெஞ்சத்தில் நிறைய சாளரத்தருகில் சென்று திரையை விலக்கிக் கொண்டு நிலவு வெள்ளம் பாயும் வானவெளியைப் பார்த்தாள்!

நந்தவனத்திலிருந்து வெளியேறிச் செல்லும் குதிரையின் குளம்போசை கேட்டது. ஆம்; பமீயாவைச் சந்தித்து விட்ட பின் அல்தூனியாதான் அந்தக் குதிரையில் செல்ல வேண்டுமென்று அரசி யூகித்துக் கொண்டாள். அரசியாக நடித்துவிட்டு வரும் பமீயாவின் வரவுக்காக பீகம் ருசியா ஆவலோடு காத்துக் கொண்டு நின்றாள்.

சற்று தூரத்தில் பல்லக்கு வருவதும் தெரிந்தது. பமீயா என்ன சேதி கொண்டு வரப் போகிறாளோ என்று அரசி துடித்தாள். அலாவுதீனைக் களத்தில் வந்து கண்டதும், காதலித்ததும் யார் என்ற குழப்பத்தோடு, பமீயாவின் அனுபவத்தைக் கேட்கும் ஆவலும் சேர்ந்து அதிகக் குழப்பத்தை உண்டாக்கியது. ஆனால் பமீயாவோடு அவள் பேசும்பொழுது சயத் அருகில் இருப்பது பலவிதமான இரகசியங்கள் வெளியாகக் காரணமாகிவிடும் என்ற அச்சத்தில், அவனை ஏதாவது வேலை சொல்லி வெளியே அனுப்பி விடும் எண்ணத்தில் அழைத்தாள்.

"சயத், நீ மிகவும் களைத்துப் போயிருக்கிறாய். இந்தா, பணம். இதை எடுத்துக் கொண்டு போய் இன்று இரவு உன் இஷ்டப்படி செலவழித்து விட்டு வா," என்று அவன் கரங்களில் நிறையப் பணத்தைக் "கலகல" வென்று கொட்டினாள். பணத்தைப் பார்த்தவுடன் பல்லை இளித்தான் சயத்! அடுத்த கணமே, கலகலக்கும் பணம் அளிக்க விருக்கும் சுகத்தை எண்ணியபடியே வெளியேறினான் சயத்.

தனிமையில் விடப்பட்ட அரசி தன் அறைக்குள் பதுங்கினாள், பணிப் பெண்களின் பார்வையில் படாமல் இருக்க! பல்லக்கும் வந்தது. பமீயா இறங்கியவுடன், தான் மிகவும் களைப்பாக இருப்பதாகவும், அவர்கள் போய் படுத்துக் கொள்ளலாம் என்றும் கூறிவிட்டு அரசியின் அறைக்கு விரைந்தாள்.

"பமீ!" என்று கூவியபடியே நிஜ அரசி போலி அரசியைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள்.

"பமீ, என்ன நடந்தது? அல்தூனியா என்ன சொன்னார்? உன்னிடம் அன்பாக நடந்து கொண்டாரா? கண்ணியமாகப் பழகினாரா? அரசியென்றே உன்னை நம்பி விட்டாரா? என்னென்ன வாக்குறுதிகள் கொடுத்தார்? எப்படி எப்படியெல்லாம் பேசினார்? கொஞ்சினார்?...வெட்கப்படாமல் சொல்லு, பமீ! ஹூம்...சீக்கிரம்!"-மூச்சுவிடாமல் அரசி கேள்விகளைக் கேட்டு பமீயாவையும் மூச்சிழக்கச் செய்தாள்.

"பீகம்; வேடிக்கையான அனுபவம்! அவர் என்னிடம் கொஞ்சவுமில்லை-குழையவுமில்லை. அரசியென்ற கண்ணியத்துடன், தூரத்தில் நின்றபடியே வெகு மரியாதையாகப் பேசினார். நீ கைதியானாலும் அரசிக்குரிய மரியாதை எள்ளளவும் குறையாது என்று வாக்குறுதியும் கொடுத்தார்...

பி, சி. கணேசன் பி. எஸ்ஸி., பி. டி.,

ஆனால்...?" என்று நீட்டினாள் பமீயா.

"ஆனால் என்னடி?" என்று அரசி ஆவலோடு கேட்டாள்.

"டெல்லி சுல்தானாவை அல்தூனியா இச்சைக்குகந்தவளாக்கிக் கொண்டு விடுவாரோ என்றுதான் எண்ணினேன். ஆனால், அவரோ பணிப்பெண் ஒருத்தியிடம் மனதைப் பறி கொடுத்து விட்டாராம்..."

"பணிப்பெண்ணா?"–புதிர்கள் வளர்ந்துகொண்டே போயின. ஒரு வேளை, பமீயாவை அரசியல்ல என்று அறிந்து, பணிப் பெண் என்று தெரிந்ததும் அவனிடமே மனதைப் பறிகொடுத்து விட்டாரோ அல்தூனியா என்று கூட பீகம் சந்தேகப்பட்டாள்! அவளுடைய உள்ளத்தில் பொறுமைகூட அரும்பத் தலைப்பட்டது!

"அந்தப் பேறுபெற்ற பணிப் பெண் யார் பமீ?"

"கற்பனைப் பெண்; உங்களுடைய தோழிதானாமே அவள்?"

பமீயாவாகவே இருந்துவிடுவாளோ என்று பயந்தாள், அரசி.

"என்னுடைய தோழியா? நீ தானே என்னுடைய தோழி?" என்றாள் அரசி.

"உங்களுடைய தோழிதானாம் சலீமாவாம் அவளுடைய பெயர்!"—பமீயா புதிரை அவிழ்த்தாள்.

"சலீமா!" —அரசியின் கற்பனை பின் நோக்கிச் சென்றது. நள்ளிரவு — போர்க்களம் — வெண்ணிலவு—யமுனை ஆறு—அலாவுதீனும் சலீமாவும்—அலாவுதீன் தளபதி என்பது பொய்—அவள் சலீமா என்று கூறியதும் பொய்-ஆம், அன்று யமுனையாற்றங்கரையில் போர்க்களத்தில் வாலிபனிடம் உள்ளத்தைப் பறி கொடுத்த சலீமா எப்படி உண்மையில் அரசி ருசியா பீகமோ, அதே போல் சலீமாவைச் சந்தித்த கற்பனைத் தளபதி அலாவுதீன் அல்ல—அல்தூனியா! வெற்றி வீரன் அல்தூனியா!

அலாவுதீனாக அன்று அவள் மனதைச் சிறை செய்தவர், இப்பொழுது அவளுடைய உடலை அல்தூனியாவாக சிறை செய்திருக்கிறார். அவளுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட நெருக்கடிகள் இப்படி ஒரு இன்பமான திருப்பத்தை அடையும் என்று அவள் கற்பனைகூட செய்து பார்க்கவில்லை.

"என்ன பீகம்? என்ன யோசிக்கிறீர்கள்?" என்றாள் பமீ.

"ஒன்றுமில்லை; விஷயங்கள் வேடிக்கையாகப் போகின்றன. விவரமாகப் பிறகு சொல்லுகிறேன். சலீமாவைப் பற்றி நீ என்ன சொன்னாய்?" என்றாள் அரசி.

"நான் என்ன சொல்ல இருக்

❋ தொடர்ச்சி 8-ம் பக்கம்



பொதுச் செயலாளரும் ஏனைய கழக முன்னணி வீரர்களும் குளித்தலை புகைவண்டி நிலையத்தில் வந்திறங்கும் காட்சி!



பொதுக்குழு கூடி முடிவெடுத்த இடம்!

குளித்தலையில்

தென்னகத்து மக்கள் சக்தியின் இதயமாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இதயம் நிகர் பொதுக் குழு, சென்ற 14–4–57 ஞாயிறன்று குளித்தலையிலே கூடி, கழக வளர்ச்சி குறித்தும், ஆக்க வேலைத் திட்டங்கள் குறித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றி யிருக்கிறது.

பொதுத் தேர்தலுக்குப் பிறகு—மக்கள் மன்றத்தின் மகத்தான வரவேற்பையும், வாகை மாலைகளையும் சூடிக் கொண்ட பிறகு—நடைபெற்ற முதல் பொதுக்குழு அதுவாகையால் மாற்றுக் கட்சித் தோழர்களின் கூர்த்த விழிகள் குளித்தலையை நோக்கி யிருந்தன.

ஏனெனில் குளித்தலைத் தொகுதியிலேதான் பொதுத்தேர்தலின்போது தமிழகத்திலேயே எந்த ஓட்டுச் சாவடியிலும் நடைபெற்றிருக்காத விசித்திரம் ஒன்று நிகழ்ந்தது! தண்ணீர்ப்பள்ளி என்ற இடத்திலே இருந்த பெண்கள் ஓட்டுச் சாவடியில் காங்கிரசுக்கு பெரியதொரு ஏமாற்றம் தரப்பட்டது. அங்கிருந்த மாட்டுப் பெட்டியை 'காலி' யாகவே விட்டு, ஆளும் கட்சிக்கு தக்கதோர் பாடம் கற்பித்தனர் தாய்மார்கள்.

அத்தகைய பெருமைக்குரிய குளித்தலையிலே கூடிய பொதுக் குழு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் பிரவேசத்தின் இரண்டாவது கட்டத்தைப்பற்றி தீர்மானம் செய்திருக்கிறது.

> "மாவட்ட ஆட்சி மன்றம், நகராட்சி மன்றம், ஊராட்சி மன்றம்—ஆகியவற்றிற்கான தேர்தல்களில் தி. மு. கழகம் ஈடுபடுவதற்கான வழிவகை குறித்து ஆவன செய்யுமாறு பொதுச் செயலாளரை இப்பொதுக் குழு கேட்டுக் கொண்டிருக்கிறது."

—நாடெங்கும் பரவி இருக்கும் — பொதுத் தொண்டே பெரும் தொண்டு என்ற இலட்சிய முழக்கத்தோடு பவனி வந்துகொண்டிருக்கும் மக்கள் பாசறையின் இந்தத் தீர்மா



அறிஞர் அண்ணா; மு. க.; சொல்லின் செல்வர்!



நகரெங்கும் வீதி வளைவுகள் நாட்டுக்குழைப்போரை வரவேற்றன!



மாவட்ட மன்றம், நகராட்சி—ஊராட்சி—தேர்தலில் தி. மு. க. ஈடுபடவேண்டும் என்ற தீர்மானம் பற்றி மு. க. பேசுகிறார்!



பொதுச் செயலாளர் நிலைமை விளக்கம் தருகிறார்!

பொதுக்குழு உறுப்பினர்கள் மாவட்ட வாரியாக அமர்ந்திருக்கும் காட்சி!

பொதுக்குழு!

...னம் குறித்து நாடு மகிழ்கிறது; நல்லோர் நெஞ்சமெல்லாம் புதுப்பண் பாடி வாழ்த்துகிறது.

இந்தித் திணிப்பு வெறியில் ஒரு செயல் முறைத் திட்டமாக பழக்கத்தில் வந்திருக்கும் 'நயா பைசா' முறை, நாட்டிலே—ஏழை எளியோர்களிடையே—வியாபாரிகளிடையே—ஏற்படுத்தியிருக்கும் குழப்பத்தை ஆட்சியாளருக்கு எடுத்துக் காட்டி, இம்முறைக்கு வலுவான கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறது. மேலும் இம்முறையினால் ஏற்பட்டிருக்கும் விலைவாசி ஏற்றத்தையும் தடுக்க தக்க நடவடிக்கை சர்க்கார் எடுக்க வேண்டுமென்றும் அறிவுறுத்துகிறது.

'இந்தியத் தாயின் குரலுக்கு உலகெங்கும் ஒரே வரவேற்பு; பெரு மதிப்பு' என்கிறார்கள். எனினும் காஷ்மீர் விவகாரத்தில் அமெரிக்காவின் தலைமையில் நீதி வழங்க வேண்டிய ஐக்கிய நாட்டு சபையும், வல்லரசுகளும் இந்தியாவுக்குப் பாதகமாக நடந்து கொள்ளும் தன்மையை பொதுக்குழு வன்மையாகக் கண்டித்திருக்கிறது!

'இவர்களுக்கு யார் அளிப்பார்கள் ஓட்டு? வீண் முயற்சியில் குதித்து விட்டார்களே; இனி மீள்வது எங்கே? வாழ்வது எங்கே?'—என்று தப்புக் கணக்கிட்டு ஆரூடம் கணித்தவர்களின் முகத்தில் கரி பூசி—பெருவாரியான வாக்குகள் அளித்த வாக்காளர் பெருமக்களுக்கு தன் இதயப்பூர்வமான நன்றியையும் தெரிவித்திருக்கிறது பொதுக்குழு. திராவிட முன்னேற்றக் கழக சட்டசபைக் கட்சியையும் வரவேற்றிருக்கிறது!

பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக் குழுவில் எண்பத்தைந்துக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.

நகரெங்கிலும் வளைவுத் தோரணங்கள் நிறுத்தியும், வரவேற்றும். உபசரித்தும் – பொதுக் குழுவின் சிறப்புக்குப் பாடுபட்ட குளித்தலைத் தோழர்களை நாவலர் அவர்கள் பெரிதும் பாராட்டிப் பேசினார்கள்! ஏனெனில் அவர்கள் திராவிடத்தின் பாராட்டுக்குரியவர்களல்லவா!



சொல்லின் செல்வர் சம்பத் காஷ்மீர் பிரச்சினை பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்!



வரவேற்புப் பொதுக்கூட்டத்தில் ஒரு காட்சி!



அழகிய மேடையின் ஒரு தோற்றம்; அறிஞர் அண்ணா அறிவுரை தருகிறார்!

அபிசீனிய அடிமை

✻ 5-ம் பக்கத் தொடர்ச்சி

கிறது? அப்படி ஒருத்தி இருந்தால்தானே! சலீமா என்ற தோழி ஒருத்தியும் எனக்கு இல்லையே என்றேன்!"

"அவர் என்ன சொன்னார்?"

"என்ன சொல்லுவார்? பேசாமல் சிறிது நேரம் நின்றார். பிறகு நாளை இதே நேரத்தில் அவரைச் சந்திக்கும்படியாகக் கூறிவிட்டுப் போய்விட்டார்," என்றாள் பமீயா.

"பமீ! உனக்கு நான் மிகவும் கடமைப் பட்டிருக்கிறேன்," என்றுகூறி, அரசி பமீயாவைத் தழுவிக் கொண்டு முத்தமிட்டாள்.

பமீயா, புரிந்தும் புரியாமலும் விழித்தாள்.

"நானே நாளைக்கு அல்தூனியாவை நந்தவனத்தில் சந்திக்கிறேன். பமீ, நாளைக்கு நீ தோழி—நான் அரசி!" என்றாள் பீகம்.

அரசியின் போக்குப் புரியாமல் விழித்தாள் பமீயா!

14

மறுநாள் இரவு அல்தூனியாவின் வருகைக்காக ருசியா மலர் வனத்தில் காத்திருந்தாள். அவளுடைய மனம் உணர்ச்சிப் போராட்டங்களால் நிரம்பியிருந்தது. சலீமாவின் மீது—தன் மீது—அல்தூனியாவிற்கு உள்ள காதல் மாறவில்லை என்பதில் அவளுக்கு மிகதிருப்தி! மீண்டும் தனக்கும் அல்தூனியாவிற்கும் இடையே உள்ள காதலில் பமீயா குறுக்கிட்டுவிடக்கூடாதே என்ற அச்சம் ஒருபுறம் அவள் உள்ளத்தில் இருந்தது. மாறுபட்ட எண்ணங்கள் அலைக் கழிக்க, ஆவல் நிரம்ப அல்தூனியாவின் வருகைக்காகக் காத்திருந்தாள்.

தூரத்தில் குதிரையின் குளம்படி ஓசை கேட்டது. ருசியாவின் உள்ளம் படபடத்தது. சில விநாடிகளில் அல்தூனியா வந்து விடுவான்...

குதிரை வந்து நின்றது. அல்தூனியா குதிரையின் மேலிருந்து கீழே குதித்தான். பீகம் முகத்தைத் திரையிட்டு மறைத்துக் கொண்டு நின்றாள்.

"பீகம்!" என்றான் அல்தூனியா. யமுனை யாற்றங்கரையில், பால் நிலவில், பளிங்குப் படிகளில் அமர்ந்து அன்பு உரைகள் பேசிய அந்தக் குரல் மீண்டும் நினைவுக்கு வந்தது. அவள் உடலெல்லாம் புல்லரித்தது!

முகத்திரையை விலக்கி, கடை விழியால் அந்தக் கட்டழகனைப் பார்த்தாள். ஆம், அலாவுதீனும் அல்தூனியாவும் ஒரே உருவத்திற்குச் சொந்தமான இரண்டு பெயர்கள்! இரு விழியால் அந்த உருவத்தைத் தழுவினாள். மனத்தால் உண்டாள். உள்ளம் நெக்குருக, "அலாவுதீன்!" என்றாள். இதய வீணையின் உணர்ச்சித் தந்திகள் அதிர்ந்து, இன்ப நாதத்தைச் சொல்லாக்கின!

எங்கோ கேட்ட குரல்! நேற்று வந்த அரசியின் குரலல்ல என்று எண்ணியபடியே அல்தூனியா அவளை நெருங்கினான். வண்ண முகத்திரை களையப்பட்டது — வஞ்சிக் கொடி 'சலீமா' நின்று கொண்டிருந்தாள்!

"சலீமா" என்றான் அவன். தூரம் குறைந்தது! அவன் மார்பில் அவள் துவண்டாள். கையிரண்டும் மெய்யிறுக, கன உதட்டை இதழ் நிலத்தில் ஊன்றினான்! விதைத்தான் முத்தம்! இன்பம் மலர் வனத்தில் கொள்ளை போயிற்று!

"சலீமா, என்னை ஏன் சலீமா இப்படி ஏங்க விட்டாய்?"

"நீங்கள் மட்டும் என்னவாம்? அப்பொழுதே உங்கள் உண்மைப் பெயரைச் சொல்லியிருந்தால் எவ்வளவு நெருக்கடிகள் இல்லாமல் இருந்திருக்கும்......என்னை ஏமாற்றி விட்டீர்கள்...போங்கள்," என்று அரசி ஊடினாள்.

"ஆமாம், நேற்று வந்த பீகம் சலீமா என்றதோழி யாருமே இல்லை யென்று சொன்னார்களே, இப்பொழுது எப்படி நீ இங்குவந்தாய்? உங்கள் பீகம் பொய் பேசுவதில் கெட்டிக்காரர்தான்," என்றான் அல்தூனியா.

"உண்மைதான். அரசி ருசியா பொய் பேசுவதில் மகா கெட்டிக்காரி—உங்களைப் போல! இல்லையில்லை; உங்களை விட கெட்டிக்காரி! ஏன் தெரியுமா? உங்கள் பொய் அம்பலமாகி விட்டது. ருசியாவின் பொய் இன்னும் வெளிப்படாமலே இருக்கிறது."

"ஏன் வெளிப்படவில்லை; என் சலீமாவை உங்கள் பீகத்தால் மறைத்து வைக்கவே முடியவில்லையே!"

"ஏன் முடியவில்லை; பீகத்தையேதான் சலீமா மறைத்து விட்டாளே!"

"என்ன சலீமா புதிர் போடுகிறாய்?"

"புதிரல்ல ஹுஸூர்; விளக்கம்! உங்களை ஏமாற்றி விட்டதற்காக உங்களுடைய மன்னிப்பைக் கோருகிறேன். நேற்று உங்களைச் சந்தித்தது ருசியா பீகமல்ல; அரசியின் பணிப்பெண்; அபிசீனிய அடிமை யாகூத்தின் காதலி; பமீயா! இதோ, இப்பொழுது உங்கள் முன் நிற்பதும், போர்க்களத்தில் உங்களுடைய காதலை உடைமையாகப் பெற்றவளுமான நான்தான் அரசி—சலீமாவும் நானேதான்!"

அல்தூனியா, நடப்பது கனவா அல்லது உண்மையா என்ற விஷயம் புரியாமல் தவித்துக் கொண்டிருந்தான். இதோ, இப்பொழுது தன்னுடைய பிடியில் சிக்கி இன்பம் பயந்து கொண்டிருப்பவள், ஒரு காலத்தில் தன்னுடைய எஜமானியும் விரோதியுமாகயிருந்து பிறகு மாறு பெயரில் காதலியாகி விட்ட அரசி ருசியா என்பதை எண்ண எண்ண அல்தூனியா இனந் தெரியாத புதுப்புது உணர்ச்சிகளைப் பெற்றுக் கொண்டிருந்தான்

"பீகம்; என்னை மன்னித்து விடுங்கள்," என்றான் அல்தூனியா—நாக்குழற!

"அபச்சாரம் ஹுஸூர்! நான் இனி என்றும் உங்கள் அன்புக்குரிய சலீமாதான்!"—அரசி அவனுடைய காதலுக்கு அடிமையானாள்!

"சலீமா! ருசியா! நீதான் என் ஜீவ ஒளி! உனக்கு நான் இழைத்த கொடுமைகளை மறந்து விட்டதாக—மன்னித்து விட்டதாக ஒரு வார்த்தை சொல், கண்ணே!"

"அரசு போனால் என்ன, ஹுஸூர்! உங்கள் அன்பு என்னை அரசாளட்டும்! உங்கள் இதயத்தில் என்றும் நீங்கும்படி ஒரு அரியணை கொடுங்கள் போதும்...! அல்லாவின் ஆணையாக அதுபோதும் மகராஜ்!"

அல்தூனியா அவள் முகத்தில் இன்ப முத்திரைகள் இட்டுக்கொண்டிருந்தான். நிலவு மேல் வானில் சாய்ந்து நேரமாகி விட்டதை அறிவித்தது!

ருசியாவும், அல்தூனியாவும் மாளிகை நோக்கிப் புறப்பட்டார்கள். எதிரே ஒரு குதிரை வீரன் விரைந்து வந்து, அல்தூனியாவிடம் ஓலையொன்று கொடுத்தான். டெல்லியின் முத்திரை பெற்ற ஓலை அது! படித்தான் அல்தூனியா! பாம்பெனச் சீறினான்! ருசியா விஷயம் அறியத் துடித்தாள்.

அரசி ருசியாவை போர்க் கைதியாக விசாரணை செய்ய டெல்லி நகருக்கு பெய்ராமிடம் அனுப்பி வைக்க வேண்டுமென்பதுதான் அந்த உத்திரவு!

அல்தூனியா உத்திரவைத் திரும்பத் திரும்பப் படித்தான். அவன் மனதில் புயல் வீசிக் கொண்டிருந்தது.

(தொடரும்)

காசு என்றே கூறுவோம்!

"இப்பொழுது தெருவில் எங்கு திரும்பினாலும் நயா பைசாவைப் பற்றிய பேச்சுத்தான். "காலணாவுக்கு இரண்டு பிட்டாய் என்று வைத்துக் கொண்டால், அரையணாவுக்கு நாலு தர வேண்டுமா இல்லையா? அரையணாவுக்கு மூன்று நயா பைசாதானே தருகிறார்கள்?" என்று சில பையன்கள் கேட்கிறார்கள்.

காய்கறிக் கடைக்காரிகளோ, "புதுக் காய்கறிகளைத் தருகிறோம். ஆனால் நீங்கள் பழைய காசையே கொடுங்கள் போதும்" என்கிறார்கள்.

காசு சின்னது; ஆனால் அது உண்டாக்கியிருக்கும் குழப்பமோ பெரியது. கத்திரிக்காய் முதல் காப்பி இட்லி வரை, தந்தி முதல் கார்டு வரை, பிளாட்பாரம் டிக்கெட்டு முதல் கீரைக்கட்டு வரை இது குழப்பி இருக்கிறது......

ஒரு நாட்டிலே அதிக செலாவணியில் இருக்கும் பொருள்களின் பெயர்கள் அவர்கள் சொந்த மொழியிலேயே இருக்க வேண்டும். 'நயாபைசா' என்ற பெயர் தமிழல்ல. அதில் தமிழிலும் ஒன்றும் குறிக்கப்படவில்லை. ஆங்கிலேயர் ஆண்டபோதுகூட நமது காசுகள் சிலவற்றில் தமிழ் இருந்ததே! அடிமை நீங்கி சுதந்திரம் அடைந்த பின் அந்தச் சலுகை கூட இல்லையே என்று வருந்துவது இயற்கை.

அரியணையில் தமிழ்த் தாய் அமர்ந்த இவ்வருஷம் நமது நாணயத்திலும் தமிழ்மொழி இடம்பெறத்தான் வேண்டும். ஹிந்திப்பித்து இந்த அளவுக்கு வேண்டுவதில்லை. கார்டிலே ஹிந்தி; கவரில் ஹிந்தி; மணியார்டர் பாரத்தில் முழுக்க முழுக்க ஹிந்தி; இவைகளைத் தமிழ்நாட்டு மக்கள் பார்க்கும்போது அவர்களுடைய மனத்தில் கொஞ்சம் சிரமம் உண்டாவது இயற்கை.

ஹிந்தியை நன்றாகப் பரப்பட்டும். வேண்டாம் என்று யாரும் சொல்லவில்லை. அதற்காக எல்லாவற்றிலும் அதையே போட்டுத் தொலைப்பது கண்டிக்க வேண்டிய விஷயம்தான்.

தமிழர்களைப் பொறுத்த வரையில் இந்த நாட்டில் பணத்தில் குறைவான மதிப்புடைய நாணயத்தை 'காசு' என்றுதான் அழைத்திருக்கிறார்கள். இந்த நயாபைசாவையும் 'காசு' என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும் என்று நாம் எண்ணுகிறோம். ரூபாய்க்கு நூறு காசு என்றால் எல்லோருக்கும் தெரியும்.

ஆகவே இன்று முதல் புதுமணம் வீசட்டும். நாடு நம்முடையது அரசு நம்முடையது. நம் நாட்டைத் 'தமிழ் நாடு' என்றே அழைப்போம். புதுப் பைசாவையும் காசு என்றே அழைப்போம்.

"ஆனந்த விகடன்" (14—4—57)

'கௌரவர்' 100 பேர் - ஆனால் 'பாண்டவரோ' ஐந்து பேர்தான்!

✻ 4-ம் பக்கத் தொடர்ச்சி

டது! எங்கள் 'பாதை'யை மக்கள் புரிந்துகொண்டுவிட்டார்கள்! எங்கள் கோரிக்கை நாட்டு மக்களால் கவனிக்கப்படுகிறது! 15 பேர்தான் நாங்கள் என்றாலும், அத்தனை பேருமே விடுதலைப் பட்டாளத்தின் முன் வரிசை!' என்று எடுத்துச் சொல்ல, அப்போது தான் நல்ல நெஞ்சுரம் இருக்கும்.

சட்டசபையிலே வார்த்தைக்கு வார்த்தைப் பேசிவிடுவதென்றால் பேசிவிடுவோம்—கஷ்டமல்ல!

ஆணவத்திற்கு எதிராக ஆணவத்தைக் காட்டி விடுவோம்—அதுவும் சுலபம்!

"150 பேர் நாங்கள்; நீங்கள் 15 பேர்தானே! என்ன செய்ய முடியும்?" என்று எந்த மந்திரியாவது ஆணவத்தோடு கேட்டால், நானோ, கருணாநிதியோ, அல்லது ஆசைத்தம்பியோ பதிலளித்துவிடலாம்; "நீங்கள் பாரதம் படித்ததில்லையா? பக்த சிரோன்மணிகளாயிற்றே! கௌரவர்கள் நூறு பேர்; பாண்டவர்கள் 5 பேர் என்று தானே இருக்கிறது! மேலும் கதை முடிவில்—கடைசிப் பக்கத்தில் பாண்டவர்கள் வெற்றியடைந்திருக்கிறார்கள் என்று தானே இருக்கிறது! அடுத்த ஐந்தாவது வருடத்தில் இங்கேயும் அந்த மாறுதல் ஏன் நிகழக்கூடாது?" என்று கேட்டுவிட முடியும் சுலபமாக!

ஏனென்றால் நாம் எடுத்துக்கொண்டிருக்கிற காரியம் சட்டசபைக்குச் செல்வது மாத்திரமல்லவே! நாம் மிக மிகப் பழமையான நாகரீகத்திற்குச் சொந்தமானவர்கள்! உலகிலேயே எழிலுள்ளது என்று சொல்லப்பட்ட ஒரு சிறந்த பண்பாட்டுக்கு உரியவர்கள்! நம் தாயகம் உலகத்திலே மற்ற மற்ற தாயகங்கள் எல்லாம் 'பேயகங்கள்' என்று கருதப்பட்டு வந்தநேரத்தில், புகழ்க்கொடி நாட்டி, பாரெங்கும் வாணிபத்தை நடத்தி வந்த சக்தி பெற்றிருந்தது!

இன்று தாழ்ந்து கிடக்கிறோம்!

ஒரு காலத்தில் கொடி கட்டி வாழ்ந்தவர்கள், இன்றைய தினம் எவனோ பிடிக்கும் கொடிக்கு 'ஜே' போட்டுச் செல்கிறோம்!

ஒரு காலத்தில் வாணிபத்தில் சிறந்திருந்த நாம், இன்றைய தினம் சிலோனுக்கும், மலேயாவுக்கும், ஜான்சிபாருக்கும், எமது சகோதரர்களைக் கூலிகளாக அனுப்புகிறோம்!

ஒரு காலத்தில் சந்தனக் கட்டையை அடுப்பில் வைத்து எரித்தவர்கள் என்று பெருமையோடு சொல்லப்பட்ட தமிழ் மக்கள், இன்றைய தினம் உள்ளம் என்ற அடுப்பிலே, வேதனை என்ற விறகை வைத்து, கண்ணீர் என்ற நெய்யைக் கொதிக்க வைத்துக்கொண்டிருக்கிறார்கள். என்று சொல்லத்தக்க அளவுக்கு வறியராக ஆக்கப்பட்டிருக்கிறோம்!

நம்முடைய கோட்டைகள் எல்லாம் இடிபட்டுவிட்டன! நம்முடைய அகழிகள் எல்லாம் தூர்ந்து விட்டன! நம்முடைய பட்டணங்கள் எல்லாம் சாதாரணக் கரைகளாகிவிட்டன! நம்முடைய பட்டிதொட்டிகள் எல்லாம் பாதகர்கள் பத்து பேரும், பாதகர்களுக்கே உழைத்து உழைத்துப் படுகுழியிலே தள்ளப்படுகின்ற பாட்டாளிகள் ஆயிரம் பேரும் என்று சொல்லத் தக்க அளவுக்கு

சந்தனக் கட்டையால் அடுப்பெரித்த நாம்; சித்திரவதைக் கூடத்திலே சிக்கிவிட்டோம்!

சித்திரவதைக் கூடங்களாகி விட்டன!

நமது காடுகளிலே இருக்கின்ற செல்வங்கள் நம் கண்களுக்குத் தெரியவில்லை! நமது கடலுக்குள் இருக்கும் முத்துக்களுக்கு நாம் சொந்தக்காரர்கள் இல்லை! நமது காடுகளில் விளையும் தேக்கு மரங்கள் நமக்குப் பயன்படவில்லை! நமது பூமியிலே இருக்கும் தங்கம் நமக்கு எடுத்துத் தரப்படுவதில்லை! பக்கத்திலே சேலம்; அங்கே இரும்பு இருக்கிறது; இந்த நாட்டிலே இல்லாமையும் இருக்கிறது! கோலாரிலே தங்கம் இருக்கிறது; எனினும் ஒவ்வொரு வீட்டிலும், குடும்பத்திலும் தரித்திரம் தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது!

—தோள்வலியும், மனவலியும் கொண்டவர்களான தமிழ் மக்கள், இன்று வெளி நாடுகளிலே 'கூலி'கள் என்று பரிகாசப்படுத்தப் படுகிறோம்! 10 ஜப்பானியர் வேற்று நாட்டிலே கட்டை வெட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டதில்லை; 4 சீனாக்காரர்கள் வேற்றுநாடுகளிலே கூலிகளாக இருப்பதாகச் செய்தி அறிய முடியாது; 20 மார்வாடிகள் பிழைப்பதற்கு வழியின்றி வெளி நாடு சென்றார்கள் என்றும் அறிந்திருக்கமாட்டார்கள்!

நம் நாட்டிலே காவேரி ஓடுகிறது; ஒரு புறத்திலே வைகை கரை புரண்டு ஓடுகிறது; வடக்கே நோக்கினால் ஆந்திராவிலே கோதாவரி இருக்கிறது; கிருஷ்ணா இருக்கிறது; பார்க்கிறோம்; வானத்தை முட்டும் மலைகளைப் பார்க்கிறோம்; மலைகளும் மேகங்களும் ஒன்றோடொன்று தழுவிக் கொள்ளும் காட்சியைப் பார்க்கிறோம்; அப்படித் தழுவிக் கொள்ளுகின்ற நேரத்தில் முத்து முத்தாக மழை பொழிவதைப் பார்க்கிறோம்; நஞ்சையைப் பார்க்கிறோம்; புஞ்சையைப் பார்க்கிறோம்; காடு கரம்புகளைக் கழனியாக்கிக் களிக்கின்ற உழவர்களைப் பார்க்கிறோம்; இவ்வளவும் இருக்கின்ற நாட்டிலே ஒரு கவளம் சோற்றுக்கு வழியின்றி, லட்சோப லட்சம் மக்கள் 'சிலோனு'க்கு ஓடுகிறார்கள்; ஓடுகின்ற இடத்திலும் அந்த நாட்டு சர்க்காரால் துரத்தி அடிக்கப் படுகிறார்கள்! 'ஏன்?' என்று கேட்ட இங்கு ஒரு நாதியும் இல்லை; ஒரு துரைத்தனமும் இல்லை!

பாக்கிஸ்தானிலே பட்டாக் கத்திக்குப் பயந்து ஓடிவந்த இந்து அகதிகளைக் கண்ட உலகப் புகழ்பெற்ற பண்டித நேரு, கோடிக் கணக்கில் பணத்தைச் செலவிட்டு, அவர்களின் கண்ணீரைத் துடைப்பது கடமை என்று ஓடினார். இந்தப் பெருந்தன்மையை நான் இழிவு படுத்துவதாகக் கருத வேண்டாம்; ஒரு நாட்டின் முதல்வருக்கு இருக்கவேண்டிய கடமை அதுதான். ஆனால், அதே உத்தமமான பஞ்சசீலம் பேசுகின்ற பண்டிதர், இந்த நாட்டு மக்கள்—நமது உடன் பிறந்தோர் — காப்பாற்றுவாரற்று, "நாதியற்றவர்கள்! நாடற்றவர்கள்! நாடோடிகள்!" எனத் தலையிலே இழிவு சுமத்தப்பட்டு திருப்பி விரட்டப்படுகின்ற நேரத்திலே—'ஏன்' என்று கேட்பதற்கு அவ்வளவு பெரிய நேருவுக்கு சின்னஞ்சிறு துளியாவாவது கருணை வேண்டாமா?

ஆனால் இன்றைய நிலை என்ன? இலங்கை சென்ற தமிழன் அங்கே அடிபடுகிறான்; அதைக் கண்டு இங்கே இருப்பவன் ஏதும் செய்ய வக்கில்லை! இங்கிருக்கும் தமிழன் வக்கின்றி வதைபடுகிறான்; அதைக் கண்டு அங்கிருக்கும் தமிழன் 'அப்பப்பா! நல்ல வேளை, நாம் பிழைத்தோம்!' என்று எண்ணுகிறான்! இடையிலே பெருங் கடல்-நம்மைக் கேலி செய்வதுபோல அலையோசை எழுப்பிக்கொண்டேயிருக்கிறது!

இந்த வேதனை அலை தமிழகத்தைவிட்டு நீங்க வேண்டுமானால், எங்கள் 15 பேராலும் முடியாது; டெல்லி செல்லும் 2 பேராலும் முடியாது!

தவிர, சட்டசபையிலே காங்கிரஸ்காரர்களே 'சபாஷ்' என்று மெச்சத்தக்க அளவில் பேசினாலும் முடியாது!

பேசுவது எங்கள் தொழில் முறையாகி விட்டது; அதில் நாங்கள் சோடையாகிவிட மாட்டோம்! காங்கிரஸ்காரர்களே பொழுது போகாவிட்டால் எங்களைத்தான் பேசச் சொல்லுவார்கள்! பேசி என்ன பலன்? பேசி முடித்ததும் "தூக்குங்கள் கையை!" என்பார்களே! அங்கே 150 கரங்கள் தூக்கப்படும்; இங்கே பதினைந்தே கரங்கள்தான் தெரியும்! இந்த அரசியல் உண்மையை மறைத்துப் பலனில்லை—அலங்கார வார்த்தைகளால் நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதிலும் பயனில்லை! இந்த 15 கரங்களும், அந்த 150 கரங்களுக்கு ஈடாகவேண்டுமென்றால், நாங்கள் வெளியே வரும்போது, நீங்கள் சூழ நின்று, லட்சோபலட்சம் கரங்களை எங்கள் முன்னால் நீட்டினால்தான், நாங்கள் ஆர்வமுடன், சோர்வு குன்றாது பணியாற்ற முடியும்!

ஒரு நாட்டு விடுதலைப் பட்டாளம் 10 பேர்களை மட்டும் கொண்டிருந்தால் போதாது; 10 பேர்களை மட்டும் கொண்டிருப்பது 'சர்க்கஸ் கம்பெனி!' 'அந்தர் பல்டி' அடிக்க ஒருவன்—குதிரை மேல் சவாரி செய்ய ஒருவன் — புலியின் வாயிலே தலையை விட்டு எடுக்க ஒருவன்—கம்பிக்குள் குதித்துத் தாவ ஒருவன்—இப்படி பத்து பேர் இருந்தால் சர்க்கஸ் கம்பெனிக்குப் போதும்!

ஆனால் ஒரு நாட்டு விடுதலைப் பட்டாளம் தயாராக வேண்டு

பதினைந்து கரங்கள் போதாது; பல்லாயிரம் கரங்கள் வேண்டும்!

...டென்றால், 4 எழுத்தாளர்கள்—10 பேச்சாளர்கள்—20 நடிகர்கள்—30 கனவான்கள்—இருந்தால் மட்டும் போதாது! இந்தப் பட்டாளம் தொடர்ச்சியாக வந்து கொண்டே இருக்க வேண்டும். வீழ்ந்து விட்டவன் ...பாக எழுந்து வருகின்ற வீரர்கள் ஏராளமாக இருக்க வேண்டும்!

உதாரணத்திற்குச் சொல்லுகிறேன்—ஒரு நாட்டு விடுதலைப் பட்டாளம் 'குள'மாக இருந்தால் போதாது; ஓடிவருகின்ற 'ஆறு'க இருக்கவேண்டும்! ஓடிவருகின்ற ஆறுகமட்டும் இருந்தாலும் போதாது; அந்த ஆற்றுக்குத் தண்ணீர் தருகின்ற ஊற்றுகள் இருப்பது போல, நல்ல ஊற்று நீராகவும் இருக்க வேண்டும்.

நான் சென்னையிலே ஒரு ...ட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டேன், நாங்கள் ...ட்டசபை செல்வது ஒருகுடும்பத்தில் வேலை இல்லாது இருந்த மூத்தபிள்ளைக்கு 'கான்ஸ்டேபிள்' வேலை கிடைத்தது போல என்று! கதைக்கு வைத்துக்கொள்வோமே. அந்த மூத்தபிள்ளையின் பெயர் கந்தசாமி என்று!

கான்ஸ்டேபிளான கந்தசாமிக்கு இரண்டு கடமைகள் இருக்கின்றன. ஒன்று போலீஸ் ஸ்டேஷனிலே முறைப்படி வேலை பார்க்க வேண்டும். மற்றொன்று; வேலை முடிந்து வீடு திரும்பும் கந்தசாமி வீட்டிலே தாய்க்கு மகன்; தங்கைக்கு அண்ணன்; மனைவிக்குக் கணவன்; குழந்தைக்குத் தகப்பன்; ஆகவே அந்த குடும்பத்து வேலையும் அவனுக்கு இருக்கிறது.

ஆனால் கந்தசாமி போலீஸ் ஸ்டேஷனில் காட்ட வேண்டிய முடுக்கை வீட்டில் காட்டினால் பலனில்லை; வீட்டில் காட்ட வேண்டிய கொஞ்சலை ஸ்டேஷனில் காட்டினால் பயன்படாது!

அதைப் போலத்தான் எங்களுக்கும் இரு சுபாவம் வளர வேண்டும். அங்கே காண்பிக்க வேண்டியதை இங்கே காண்பிக்கக் கூடாது; இங்கே காண்பிக்க வேண்டியதை அங்கே காண்பிக்கக் கூடாது.

அதுமட்டுமல்ல; நீங்கள் இன்னும் கொஞ்சம் கந்தசாமியோடு சென்று பார்த்தால், இன்னொரு உண்மை புரியும்!

மனைவிக்கும் அவனுக்கும் சற்று ஏறுமாறாக இருந்து—அவன் 'சாப்பாடு போடு' என்று கேட்க, அவள் காரணமின்றி உணவூட்டிக் கொண்டிருந்த குழந்தையையும் அடித்துவிட்டு, நின்ற நிலையிலேயே இலையைப் போட்டு, உணவையும் இட்டு, 'குழம்பு' என்று கேட்கும்போது கையை விரித்து, 'ரசம்' என்றதும் எதிர் வீட்டைக் கையைக் காட்டி, கடைசியில் 'மோராவது உண்டா?' என்றதும் மோர் என்று ஏதோ ஒரு பொருளை ஊற்றி — இப்படி அலைக்கழித்தால் கந்தசாமியின் மனம் எப்படி அமைதியாக இருக்கும்? கையைக் கழுவிக் கொண்டு தெருவில் இறங்கியதும், தெருவில் போவோர் வருவோர் மீதெல்லாம் ஆத்திரத்தைக் காட்டுவான். வீட்டில் பட்ட அல்லல்; அதை அங்கேயே தீர்த்துக்கொள்ளக் கூடாதா—என்று கேட்கலாம். மனைவியிடம் கோபத்தைக் காட்ட பெரும்பாலான கணவன்மார்கள் விரும்பவே மாட்டார்கள்! அதில் எத்தனையோ கஷ்டம்; எவ்வளவோ வகையான நஷ்டம்!

அதைப் போலத்தான் நீங்களும் கழகத்தை வெளியே சரியான முறையில் வைத்துக் கொள்ளாவிட்டால், நாங்களும் உள்ளே நிம்மதியாக இருக்க முடியாது.

ஆண்டவன்-சுட்டிக் காட்டும் பொருளல்ல; உணர வேண்டிய பொருள்!

கந்தசாமி நல்ல கான்ஸ்டேபிளாக இருக்கவேண்டும்; அதே சமயம் நல்ல குடும்பத்துப் பிள்ளையாகவும் இருக்க வேண்டும். அதுபோல் நாங்களும் நல்ல திறமையுடன் செயலாற்ற வேண்டிய சட்டசபை உறுப்பினர்களாகவும் இருக்க வேண்டும்; வெளியே நல்ல தொண்டர்களாகவும் இருக்க வேண்டும்.

இந்தக் கட்டத்திலே தான் நான் தாய்மார்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன், நீங்கள் பெருவாரியாக தி. மு. கழகத்திலே சேர்ந்து ஆதரவு தர வேண்டுமென்று! ஏனெனில் நாம் பேசும் மொழியைத் தாய் மொழி என்கிறோம்; வாழும் நாட்டைத் தாயகம் என்கிறோம்; ஆகவே தாயக விடுதலைக்குத் தாய்மார்களின் மகத்தான ஆதரவு அவசியமானது தானே!

"அது சரி அண்ணாதுரை! கருணாநிதி அழகாகத்தான் கதை எழுதுகிறான்; ஆசைத் தம்பி அழகாகத்தான் பேசுகிறான்; நீயும் அப்படித்தானும்; ஆனால் நீங்கள் எல்லாம் சாமி இல்லாத கட்சியாமே!" என்று தாய்மார்கள் என்னிடம் சொல்லமாட்டார்கள்; மனதிற்குள் எண்ணிக் கொள்வார்கள்!

அப்படி எந்த மாற்றாராவது உங்களிடம் சொன்னால், தாய்மார்களே, தயை கூர்ந்து—எங்கள் நல்ல எண்ணத்தை சந்தேகிக்காதீர்கள்—நாங்கள் ஆண்டவன் இல்லை என்று சொல்கிற கட்சியல்ல; கடவுள் கூடாது என்று சொல்கிற கட்சியல்ல; கடவுள் எது என்று கண்டுபிடிக்கச் சொல்கிற கட்சி!

கருணாநிதியைக் காண வேண்டுமென்று குளித்தலைக்கு வரும் ஒருவர்—கருணாநிதியை முன்னேபின்னே அறியாதவர்—தருமலிங்கத்தைக் காட்டி, "இவர்தான் கருணாநிதியா?" என்றால், "இல்லை" என்பார்கள்!

நெடுஞ்செழியனைக் காட்டி "இவர் தானா?" என்றால், "இல்லை" என்பார்கள்!

என்னைக் காண்பித்து "இவர் தானா?" என்றால், "இல்லை" என்பார்கள்.

இதிலிருந்து "கருணாநிதியே இல்லை!" என்று அர்த்தம்? "நாங்கள் கருணாநிதி இல்லை!" என்று அர்த்தம்! அதைப் போல எங்களை "அது கடவுளா? இது கடவுளா?" என்று கேட்டால், நாங்கள் "அது இல்லை; இது இல்லை!" என்று சொல்வதைக் கேட்டுவிட்டு, "ஓகோ! அப்படியானால் கடவுளே இல்லை!" என்றால்—யார் இல்லை என்று சொன்னார்கள்? கருணாநிதி என்றால் கை நீட்டிச் சுட்டிக்காட்ட முடிகிறது; ஆனால் கடவுளை எப்படிக் காட்ட முடியும்? உள்ளத்தைக் கடந்தவர்—உணர்ச்சிக்கு மட்டுமே கட்டுப்படக் கூடியவர்-ஓராயிரம்ஆண்டுகள் தவம் செய்தாலும் தோன்றினார்; மறைந்தார்; என்று அவ்வளவு சுருக்கமாக முடித்து விட்டிருக்கிறார்கள் — அவரைப் பற்றி பல பல கற்பனைகள் உலவுகின்ற நேரத்தில்— 'அது அல்ல; அது அல்ல' என்றுதான் சொல்லுகின்றோமேதவிர "கடவுள் இல்லை!" என்று யார் சொன்னார்கள்? கடவுள் இருக்கிறது, இல்லை என்பது எங்களுக்கு எப்படித் தெரியும்? எங்களுக்குத் தெரியாததை நாங்கள் 'தெரியாது' என்று ஒப்புக் கொண்டு விடுகிறோம்; ஆனால் பக்தர்களோ தெரியாததைத் தெரியாது என்று சொல்ல வெட்கப்படுகிறார்கள். "ஓகோ, கடவுளா? எங்களுக்குத் தெரியுமே!" என்று சொல்லுகிறார்கள். இது தான் வேறுபாடே தவிர, யார் உங்களுக்கு ஆண்டவன் வேண்டாம் என்றார்கள்?

அன்றலர்ந்த மலரிலே அவன் சொரூபத்தைக் காண்பதென்றால் கண்டு களியுங்களேன்!

ஏழையின் நெற்றி வியர்வையிலேதான் ஆண்டவன் இருக்கிறான் என்று தாகூர் சொன்னதுபோல - உழைப்பிலே ஆண்டவனைக் காண்பதென்றால் பார்த்துப் பரவசமடையுங்களேன்!

'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே...' என்று பழமொழி சொல்லுவார்களே; அதைப் போல ஆண்டவன் உள்ளத்திலே உணர வேண்டிய பொருளே தவிர—சுட்டிக் காட்டுகின்ற பொருளல்ல!

ஆகவேதான் கடவுள் இல்லை என்கிறவர்கள் அல்ல நாங்கள்; கடவுள் பெயரால் கட்டிவிடப் படுகின்ற கற்பனைகளைத்தான் எதிர்க்கிறோம்!

ஆகவே தாய்மார்களே; சேலை வாங்கித்தர பணத்தைச் செலவு செய்ய விரும்பாத கணவர் எப்படி 'சாயம் போய் விடும் அந்தச் சேலை!' என்று சொல்வாரோ அதைப் போலத் தான் நீங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர விரும்பும் நேரத்தில் "அது சாயம் போய்விடும் சேலை; சாமி இல்லை என்கிற கட்சி!" என்று உங்களை ஏமாற்றுவார்கள்!

ஆகவே எங்கள் எண்ணத்தில் நம்பிக்கை வைத்து—தாய்மையில் நம்பிக்கை வைத்து இந்தக் கட்டத்தில் எங்களோடு ஒத்துழைக்க உள்ளன்போடு அழைக்கிறோம்!

★

கலை பிரச்சாரத்திற்கு

★ 2-ம் பக்கத் தொடர்ச்சி

பிரச்சாரத்தைப் புகுத்துங்கள் என்று பரிசுத் திட்டங்களை வைத்துத் தூண்டிவிடுகிறார்கள்!

கலை பிரச்சாரத்திற்கு!

அமைச்சரே தூண்டுகிறார்! பதவியில் இருப்பவர்களே ஆமோதிக்கிறார்கள்; ஆதரவு தருகிறார்கள்!

வரவேற்கிறோம்; இரு கையேந்தி வரவேற்கிறோம்-இந்த மாற்றத்தை! வாழ்த்துக் கூறுகிறோம், அவர்கள் திருத்தத்திற்கு!

★

பிறைவானம்

அவனை 'யார்' என்று நான் கேட்கவில்லை; 'எங்கிருந்து வந்தாய்?' என்றும் கேட்கவில்லை; 'என்ன வேண்டும்?' என்றுகூட வினவிடவில்லை. எதிரே வந்து நின்ற அவனை ஏறிட்டு நோக்கினேன். நல்ல நேரத்தில் வந்தான் என்றுதான் நான் அந்த நேரத்தில் மகிழ முடிந்தது. ஏனெனில் அந்த நேரத்தில் எனக்கு ஒரு பையன் அவசரமாகத் தேவைப் பட்டான். எனக்கு ஒரு 'காபி' வேண்டும்; வேலையை விட்டு எழுந்துசென்றால் நேரம் வீணாகும். அதைப் 'பொன்' என்று சொல்வார்களே!

"தம்பீ, இந்தா-இரண்டணா! தெருமுனையிலே இருக்கிற கடையிலே ஒரு 'காபி'—நல்லா 'ஸ்ட்ராங்கா' வாங்கிட்டு வா, பார்க்கலாம்!" என்றேன்.

அவன் அதற்காகவே காத்திருந்தவன்போல் சில்லரையை வாங்கிக் கொண்டு ஓட்டமாக ஓடினான். பிறகுதான் எனக்கு ஒரு சந்தேகம் தோன்றியது. 'யாரோ அவன்; 'காபி' வருமா? அல்லது சில்லரையோடு சிறுவன்...?'—இப்படி எண்ணமிட்டது என் நெஞ்சம். 'சே, சே! அப்படியெல்லாம் செய்ய மாட்டான்' என்று நான் எனக்கே சமாதானம் சொல்லிக் கொண்டிருந்த நேரத்தில் 'காபி'யோடு எதிரே நின்றான் பையன்.

சாப்பிட்டேன். அவன் அங்கேயே நின்றான். நான் மறுபடியும் அவனை நோக்கினேன். என் பார்வை 'ஏன் இங்கே நிற்கிறாய்?' என்று அவனைக் கேட்டிருக்கத்தான் வேண்டும்...

"வெற்றிலை சீவல்...?" என்றான் அவன்.

"வேண்டாம்; மாடு முட்டும்!" என்றேன்.

"சிகரெட்...?"

"கெட்டப் பழக்கம்!..."

"அப்புறம் என்னதான் வேண்டும்?..." என்றான் அவன்.

அவனுக்கென்ன அத்தனை அக்கறை? "இன்னும் குளிக்கவில்லை..." என்று முணகிக் கொண்டே நான் எழுந்தேன்.

மறுகணம் அவன் கிணற்றடியில் நின்றான். சற்று நேரத்திற்கெல்லாம் 'தண்ணீர் தொட்டி' நிறைய நீரை நிரப்பி விட்டான். சோப், துண்டு-இவைகளை எங்கேயோ தேடிப் பிடித்து கொண்டுபோய் வைத்தான்.

எனக்கு மிக மிக வியப்பாக இருந்தது. அன்று முழுதும் அவன் இப்படியே இருந்தான். நான் என்ன செய்வது? அவன் உணவுக்கு வழி செய்தேன். இரவு நான் படுக்கும்வரை அவனும் படுக்கவில்லை.

—இப்படியாக அவன் என் வீட்டிலேயே தங்கி விட்டான்.

நாட்கள் ஓடின. நல்ல பையன்; சுறுசுறுப்புள்ளவன்; எதையும் விரைவில் கிரகித்துக் கொள்ளும் புத்தி கூர்மை படைத்தவன்; நம்பிக்கைக்கு மிகவும் பாத்திரமானவன்—இந்த உண்மைகளை நான் விரைவில் கண்டு பிடித்து விட்டேன்.

ஆனால்... "அவன் யார்?"

இந்தக் கேள்விக்கு மட்டும் அவன் பதில்தரவில்லை.

ஒருநாள் ... அவன் குளிப்பதற்காக கிணற்றடியில் நின்று கொண்டிருந்தான். சட்டை கழற்றப் பட்டிருந்த அவனது உடலை-முதுகுப்புறத்தை நான் அப்போதுதான் பார்த்தேன். மறுகணம் என்னையும் மீறி "ஐயோ!" என்று அலறி விட்டேன். என்ன கொடுமை!

அவன் சட்டென்று திரும்பினான். நடக்கக் கூடாதது

"முத்திரை"

நடந்து விட்டதைப் போலத் திடுக்கிட்டான். அவசர அவசரமாக சட்டையை மாட்டிக் கொண்டான். என் பார்வையை விட்டு நழுவி ஓடி விட்டான்.

இத்தகைய கோரத்தை நான் அதுவரை கண்டதேயில்லை. ஒரு சிலருக்கு அது 'சாதாரண'மாகக்கூட இருக்கலாம். ஆனால் நான் அதைத் தாங்கிக் கொள்ளும் சக்தியற்றவனாக இருந்தேன். அதைப்பற்றி அவனிடம் விசாரித்து விடத்தான் வேண்டும் என்று நான் தீர்மானித்துக் கொண்டேன். அவனைத் தேடினேன். ஆளைக் காணோம்! அவன் எங்கு போனான்? ஓரே 'புதிர்' நிறைந்த உருவமாக அல்லவா இருக்கிறான்! ஓடி விட்டானா? இனி வரவே மாட்டானா? —என்ற எண்ணற்ற வினாக்கள் நெஞ்சில் எழும்ப காத்திருந்தேன்; அலுக்காமல் சளைக்காமல் காத்துக்கொண்டே இருந்தேன்.

எனக்கு வந்திருந்த அன்றைய கடிதங்கள் என் எதிரே நீட்டப்பட்டபோது நான் ஆவலோடு வாங்கினேன். தபால்காரன்தான் என்று நான் முதலில் கருதினேன்; ஆனால் எதிரே நின்றது அந்தப் புதிரானச் சிறுவன்தான்!

"இன்று வந்த கடிதங்களா...?" என்றேன்.

"ஆமாம்; இப்போதுதான் கொடுத்துவிட்டுப் போனார் தபால்காரர்!" என்றுசொன்ன அவன், முகத்தை வேறு புறம் திருப்பிக் கொண்டு நின்றான்.

நான் எப்படி அவனிடம் 'அதை'ப் பற்றிக் கேட்பது என்ற யோசனையுடன் கடிதங்களின்மேல் பார்வையை ஓட விட்டேன்.

அவைகளில் ஒரு கடிதம் மட்டும் என் கவனத்தை வெகு வேகமாக ஈர்த்தது. அந்த எழுத்துக்கள் ... மணி மணியான எழுத்துக்கள்...என் முகவரி எழுதியிருந்த எழுத்துக்கள்...என்னைப் பெரும் யோசனையில் ஆழ்த்தி விட்டன. யாருடைய எழுத்துக்கள் அவை? நான் யோசித்தேன். கடைசியில் கண்டு பிடித்து விட்டேன். எனக்கு மிக மிக நெருங்கிய நண்பன்-எட்டாண்டு காலம் பிரிந்திருந்த உயர் நண்பன்-ஆமாம்; அவன்தான் என்னை நினைவுபடுத்திக் கொண்டு கடிதம் எழுதியிருக்கிறான்! நான் அதை அவசரமாகப் பிரிந்தேன்.

"நான் போகட்டுமா சார்? காபி..." என்று இழுத்தான் பக்கத்தில் நின்று கொண்டிருந்த சிறுவன். அந்த நல்ல சந்தர்ப்பத்தை இழந்துவிட விரும்பவில்லை நான். "அதிருக்கட்டும் தம்பி! உன் முதுகில்.."

"தயவு செய்து அதைக் கேட்காதீர்கள்..." என்றான் அவன்.

"ஏன்? ஏன் கேட்கக் கூடாது?"-எனக்கென்னவோ ஆத்திரமாக வந்தது.

"சமூகத்தில் இப்படியும்சண்டாளர்கள் இருக்கிறார்களே என்று நீங்கள் ஏங்கிப் போய் விடுவீர்கள்..."

"புரியும்படித்தான் சொல்லேன். உன் முதுகிலே தெரிவது......"

"ஜீவகாருண்யத்தின் முத்திரை..."

"புரியவே இல்லையே!"

"அறம் வளர்க்க வேண்டியவர்—காருண்ய சீலர்; கருணை மூர்த்தி—என்றெல்லாம் இன்று போற்றிப் புகழப்படும் ஜீவகாருண்ய சங்கத்துத் தலைவர் எனக்களித்த பரிசு!"

"இன்னும் புரியவில்லையே!"

"ஐயா, நான்தான் முன்பே சொல்லியிருக்கிறேனே, நான் அனாதை என்று! எனக்கு என்ன நேர்ந்தால் உங்களுக்கு என்ன?"

"மறுபடியும் அப்படிச்சொல்லாதே! புதிரை அவிழ்த்து விட்டுவிடு!"

"ஐயா, தவறு நேருகிறதென்றால், செயல் முறை கெடுதலாக இருக்க வேண்டும்—இதுதான் நியதி. ஆனால் நான் நினைத்ததோ — செய்ததோ எதுவும் தவறல்ல; ஆனால் விளைவு என்னவோ இப்படி விபரீதமாக என் முதுகில் காட்சியளிக்கிறது!

"ஆமாம்; ஜீவகாருண்ய மகா சபை என்ற 'போர்டை' நான் பார்த்ததும் உள்ளே நுழைந்தது எப்படித் தவறாக முடியும்? கால் நடைகளிலும் கேவலமாகத்தான் நான் அன்று திரிந்து கொண்டிருந்தேன், தஞ்சம் தேடி! தலைவனிடமே என்னை அழைத்துச் சென்றார்கள். தங்கமானவர்; நற்குண சீலர் என்றெல்லாம் அவரைப் புகழ்கிறார்களே, அது தவறல்ல என்றும் நான் உணர்ந்தேன்...

"அவர் என்னை அங்கேயே இருக்கச் செய்தார். தன்னுடனேயே வைத்துக் கொண்டார். பெரும்பேறு என்று நான் கருதினேன். ஆனால் என்ன அக்கிரமம்! ஐயா, நினைக்கவே என் நெஞ்சு குலுங்குகிறது!

"ஒரு நாள் நள்ளிரவில்... ஏதோ சிறு சப்தம் கேட்டு கண் விழித்தேன். படுத்திருந்த என்னைக்கடந்துயாரோநடந்து செல்வதை உணர்ந்தேன். கண் விழித்துப் பார்த்தேன். தலைவர்தான் சென்று கொண்டிருந்தார்.

நள்ளிரவில் அவருக்கு என்ன வேலை என்ற புதிரோடு பின் தொடர்ந்தேன். அவர்

❋ தொடர்ச்சி அடுத்தபக்கம்

கடைசிப் பக்கம்

எழுத்தாணி

இரா. வேணுகோபால்; சென்னை.

(?) தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் நமக்கும் கம்யூனிஸ்ட்டு களுக்கும் என்ன வித்தியாசம்?

அவர்கள் இருந்ததை இழந்தவர்கள்; நாம் இல்லாததைப் பெற்றவர்கள்-என்று அறிஞர் அண்ணா அவர்கள் பொன்மலைப் பொதுக் கூட்டத்திலே குறிப்பிட்டார்கள்!

வீ. கோவிந்தராசு; குளித்தலை.

(?) கெறாடா என்னும் சொல் எந்த மொழியிலிருந்து வந்தது?

மேசை; அலமாரி-என்பதைப் போல அது போர்ச்சுகீசிய மொழியிலிருந்து வந்த சொல்லாகும்!

ஊர்க் குருவி; ஆலங்குடி.

(?) 'திட்ட அபிவிருத்திக் கமிஷனர்' பதவிக்கு தந்தையர் கழகத்தின் முக்கியமான தோழர் ஒருவர் பெயர் அடிபடுவதாக ஒரு செய்தி உலவுகிறதே: அது உண்மையா?

ஆதாரமில்லாமலா அவர் இது வரை ஆற்றைக் கட்டி இறைத்தார்?

கே. ஆறுமுகசாமி; குடந்தை

(?) தமிழ் நாட்டில் அரசியல் எப்படியிருக்கிறது!

மந்திரி சபைத் தலைவரைப் பற்றியல்ல; எதிர்க் கட்சித் தலைவர் யார்-என்பது பற்றி மக்கள் மன்றம் பேசுகிற அளவக்கு முன்னேறியிருக்கிறது!

சோமனாதன்; உறையூர்.

(?) காமன்வெல்த் என்பது என்ன?

பொரியாருக்கும் காமாரசருக்கும் உள்ளதைப் போன்ற வேண்டாத உறவு; கூடாத நட்பு!

எஸ். விசுவநாதன், அவிசாவேள்ள.

(?) ஆபாசச் சுவரொட்டிகளைக் கிழித்தெறிய வேண்டும்-என்று பேசுபவர்களை என்னசெய்வது?

உடனே அவர்களைக் கோயில்களுக்கு அழைத்துச் சென்று அங்குள்ள ஆபாசச் சிலைகளைக் காட்ட வேண்டியது தான்!

மு. கலிய மூர்த்தி; சிதம்பரம்.

(?) திராவிடத்தைக் காந்தியமுறையில் பெறப்போகிறீர்களா?

கம்யூனிச தத்துவங்களுடன் காந்தியின் பாதையிலே நடந்து திரா விடத்தைப் பெறுவோம். இன்னும் விளக்கம் தேவையானால் தி. மு. கழகந்தான் உண்மையான கம்யூனிஸ்ட்டுக்கட்சி என்பதைப் பல முறை தெளிவாக்கி யிருக்கிறோம். காந்தியின் பாதை என்பது உயிரைப் பற்றிக் கவலைப்படாமல் கொண்ட கொள்கைக்குப் போராடுவதாகும்!

வி. இலக்குமணன், மதுரை.

(?) கொள்கையில்லாதவர்கள் எப்படி யிருப்பார்கள்?

தங்கள் கட்சிக் கொடிக்கும், பிற கொடிக்கும் வித்தியாசம் தெரியாதவர்களாயிருப்பார்கள்!

சோமசுந்தரம்; விஜயபுரம்.

(?) கேரளத்தில் கம்யூனிஸ்ட் கட்சி பதவிக்கு வந்தது எதைக் காட்டுகிறது?

எதிர்க் கட்சியும் மந்திரி சபை அமைக்க முடியும் என்பதைக் காட்டுகிறது!

(?) பக்தவத்சலம் எல்லா மந்திரி சபையிலும் இருப்பது ஏன்?

கொள்கையளவில் அவர் கருங்கல் அல்ல; மூங்கில்; யாருக்கும் வளைந்து கொடுப்பவர்— அதனால்தான் எல்லா மந்திரி சபையிலும் இடம் பெற்றிருக்கிறார்!

இராமலிங்கம்; சீர்காழி

(?) இராமசாமி படையாச்சியார் மீண்டும் உழைப்பாளர் கட்சியை உருவாக்குவாரா?

ஒரு தனிப்பட்ட மனிதருக்கு மந்திரி பதவி வாங்கிக் கொடுப்பதற்காக வளைந்து கொடுகிற அளவுக்கு வன்னியப் பெரு மக்கள் இளித்தவாயர்கள் அல்ல, நண்பரே!

ராஜலிங்கம்; நாகப்பட்டினம்.

(?) நான் எம். எல். ஏ. ஆனால் மந்திரியாக வருவேன்; அதனால் ஓட்டுப் போடுங்கள் — என்று கேட்டவர்கள் எல்லாம் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

மந்திரி வேலை என்றால் 'மந்திரிக்கும் வேலை' என்று மூலையில் உட்கார்ந்து குழையடித்துக் கொண்டிருப்பார்கள்!

பிறைவானம்....

✻ 11-ம் பக்கத் தொடர்ச்சி

மெதுவாக தனது தனி அறைக்குள்-பூஜை அறை என்று எல்லோராலும் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த அறைக்குள் நுழைந்தார். நானும்மெதுவாக நுழைந்து ஒரு ஓரமாக ஒளிந்து கொண்டு விட்டேன். அங்கே நான் கண்டது... அப்போது என் உடலையே சிலிர்க்கச் செய்து விட்டது!

''அங்கே அவர் பலமான பூட்டு போட்டிருந்த அலமாரியைத் திறந்தார். உள்ளே வரிசை வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன உயர்ந்த ரக மது பாட்டில்கள்! அவர் அவற்றில் ஒன்றை எடுத்துத் திறந்தார்;'மடக் மடக்'கென்று குடித்தார். அதே சமயம் அறைக்குள் வேறு ஒரு பயங்கரத் தோற்றமுடைய மனிதன் நுழைந்தான். 'சம்பா! நேற்று எடுத்துப்போன சரக்குக்கெல்லாம் பணம் வந்துவிட்டதா?' என்றார் தலைவர். 'ஆமாம் எசமான்; இன்னைக்கு ஒரு முப்பது பாட்டிலுக்கு கிராக்கி இருக்கிறது. வெளியிலே வைக்கோல் வண்டி தயாராக இருக்கிறது. மறைத்து எடுத்துப் போக!' என்றான். 'ம்...நடக்கட்டும்...' என்றார் மதுபோதையில் இருந்த தலைவர். அலமாரியில் இருந்த பாட்டில்கள் வெளியே கொண்டு போகப்பட்டன!

''மறுகணம் நான் மறைவிடத்தை விட்டு வெளியே பாய்ந்தேன். 'தலைவரே! இது என்ன கொடுமை?' என்று கத்தினேன்.

''தலைவர் என்னைத் திகில் கொண்ட விழிகளோடு பார்த்தார். ''பொடியா! உஷார்! இங்கு நடந்தவையில் ஓர் அணுவும் வெளியில்தெரியக்கூடாது! தெரிந்தால்...'' -என்று இழுத்தார். அப்பப்பா! அவரது கண்களில்தான் எத்தனை கொடூரம்! என்னால் ஆத்திரத்தை அடக்க முடியவில்லை. மறுகனம் 'சடா' ரென்று திரும்பினேன். வெளியே ஓட ஆரம்பித்தேன். ஆனால் என்ன அநியாயம்! 'ஓடாதே! ஓடினால் உன் உயிர் உன்னுடையது இல்லை!' என்ற தலைவரின் குரலைத் தொடர்ந்து, 'ஜிவ்' வென்று வீசி எறியப் பட்ட கத்தி ஒன்று என் முதுகில் தைத்தது. நான் மயங்கிச் சாய்ந்தேன்!

''காயம் ஆறியது. ஆனால் அந்தத் தலைவரின் மிரட்டல்-ரகசியம் வெளியானால் உயிர் போகும் என்ற பயமுறுத்தல் என்னை இன்னும் நடுங்க வைக்கிறது! அவர் செல்வாக்கென்ன; சிறப்பென்ன; என் குரலை யார் தான் மதிக்கப் போகிறார்கள்? இந்த ஏழைச் சிறுவனின் குற்றச் சாட்டை போலீஸ் வேடிக்கைப் பேச்சு என்று தானே கருதும்!-ஒழுங்காகப் பிழைத்துப்போ நீ சிறுவன்; வீணே சாகாதே! என்ற தலைவரின் அறிவுரையோடு நான் வெளியேறிவிட்டேன்.''

''யார் தம்பி, அந்த ஜீவ காருண்ய சங்கத் தலைவர்?...'' என்றேன் நான், இதுவரை பொறுமையாகக் கேட்டபின்.

''அதை மட்டும் கேட்காதீர்கள்!'' என்று சொல்லிக் கொண்டே அவன் சென்று விட்டான்.

நான் சற்று நேரம் மௌனமாக இருந்தேன். உடனே அக் கடிதத்தின் நினைவு வந்து விட்டது. அவசர அவசரமாகப் பிரித்தேன்; படித்தேன்.

'நான் உன்னை மறக்கவில்லை;
நாளை சந்திக்கிறேன் உன்
வீட்டில்! —காந்தன்''

★

பல நாள் பிரிந்திருந்தவர்களாயிற்றே; நண்பனுக்காகக் காத்துக் கிடந்தேன் நான்.

தெருவில் ஏதோ கூட்டமாக வருவது தெரிந்தது. நன்றாக கவனித்தேன். ஏக ஆடம்பரங்களுடன் ஊர்வலம் ஒன்று வந்துகொண்டிருந்தது, புகை வண்டி நிலையத்திலிருந்து. ஊர்வலத்தின் 'நாயகனு'க விளங்கிய மனிதனைக் கண்டது தூக்கி வாரிப் போட்ட எனக்கு! அது வேறுயாருமல்ல; எனக்குக் கடிதம் எழுதியிருந்த நண்பன்தான்! ஊர்வலம் என் வீட்டை நெருங்கி விட்டது. நான் திகைத்துப் போய் நிற்கையில், 'கார்' என்னருகில் நின்றது. ''நண்பா! இந்த உபசாரங்கள் முடியட்டும்; நான் தனியே உன்னை மாலை இங்கே வந்து சந்திக்கிறேன்!'' என்றான் நண்பன். கார் நகர்ந்து விட்டது

நான் வியப்பால் விழித்தேன். இதுவரையில் என் அருகில் நின்றுகொண்டிருந்த என் வீட்டுக்கு வலிய வந்த வேலைக்காரச் சிறுவனை அப்போது காணோம்! நண்பன்வருகிறானே; விருந்துக்கெல்லாம் ஏற்பாடு செய்ய வேண்டுமே என்று அவனைத் தேடிச் சென்ற எனக்கு ஒரே ஒரு துண்டுக் கடிதம்தான் கிடைத்தது

''ஐயா, இதுவரை நீங்கள் செய்தஉதவிக்கு மிக்க நன்றி! இனி நான் இங்கிருக்க முடியாது! என் முதுகிலே முத்திரை பதித்த அந்த ஜீவ காருண்ய சங்கத் தலைவர் இந்த நகருக்கு வந்து விட்டார். ஊர்வலமாக உலைக்களமாகிவிட்டது. என் நெஞ்சு. நான் வருகிறேன்! என்னைத் தேடாதீர்கள்!'

படித்து முடித்தேன் நான். மறுகணம் அவசர அவசரமாக வீட்டுக் கதவை இழுத்துப் பூட்டினேன். புகை வண்டி நிலையத்தை நோக்கி ஓடினேன். பக்கத்து ஊருக்கு 'டிக்கெட்' வாங்கிக் கொண்டு தயாராக இருந்த புகை வண்டியில் ஏறி உட்கார்ந்து விட்டேன்.

ஜீவகாருண்ய சங்கத் தலைவர்-உயிர் நண்பர்-மாலைவந்து வீட்டில் தேடுவாரே-என்று எந்த சக்தியும் என்னைத் தடுத்து நிறுத்தவில்லை, அப்போது!

அவன் என் நண்பனா?

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4-128, மவுண்ட்ரோடு, சென்னை-6, தமிழ்நாடு.